இலங்கையில்
இன்பத் தமிழ்

கா.பொ. இரத்தினம்

இலங்கையில் இன்பத்தமிழ்

'செந்தமிழ்க் கலைமணி', வித்துவான், பண்டிதர்

கா. பொ. இரத்தினம்

பி. ஏ. ஆனசு (இலண்டன்), எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை).

தலைவர், தமிழ்மறைக் கழகம்.

கலைவாணி புத்தக நிலையம்

130, திருக்கோணமலை வீதி, கண்டி.

பதிப்புரிமை]

[விலை : ரூபா 1-50

முதற் பதிப்பு—ஆவணி, 1956.

புத்துயிர் பெற்றுத் தழைத் தோங்கும்
ஈழத் தமிழகத்துக்கு
இந்நூல்
உரிமையாக்கப் படுகிறது.

Kabeer Printing Works, Madras (3321)

முன்னுரை

இலங்கைத் தமிழ்விழா மலரில் வெளிவந்த 'ஈழநாடுந்தமிழும்' எனும் எனது கட்டுரையை விரித்தெழுதி இந்நூலாக ஆக்கியுளேன். இலங்கையிலே சரித்திரம் அறியாத காலந்தொடக்கம் வாழ்ந்துவருந் தமிழ் மக்களைப் பற்றியும், அவர்கள் தமிழுக்குச் செய்த பெருந் தொண்டுகளைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. இப்பொழுது இலங்கையில் வாழுந் தமிழ்ப் புலவர்களைப் பற்றிப் பலரும் அறிவார்களாகையாலும், அவர்கள் இன்னும் பல தமிழ்ப் பணிகள் செய்ய வேண்டியவர்களாகையாலும், அவர்களைப் பற்றிய செய்திகள் இந்நூலிற் சேர்க்கப்படவில்லை.

சிறப்பாக இந்தியாவிலும், பொதுவாகப் பிற நாடுகளிலும் வாழுந் தமிழ் மக்கள், இலங்கைக்குந் தமிழுக்குமுள்ள தொடர்புகளை நன்கு அறியாமல் இருக்கிறார்கள்[1]. எனவே நம் நாட்டு மக்களுக்கு மாத்திரமன்றி அவர்களுக்கும் இந்நூல் பயன்படத் தக்கது.

சிங்களர்களும் அவர்களுடைய சிங்கள மொழியுந் தோன்றுதற்கு முன்னரும் இலங்கையில் நிலைபெற்று வாழ்ந்து வரும் நம் தாய் மொழிக்கு, இந்த ஆண்டில் ஒரு பேரிடர் ஏற்பட்டுளது. நம் முன்னோர் போற்றி வளர்த்த முத்தமிழ் இன்று

1. கல்கி—22-11-53—பக்கம்—59.

இலங்கையிலே முடியிழந்துவிட்டது; சிங்களத்தோடு சிங்காசனத்தில் வீற்றிருந்த செந்தமிழ் இன்று சீரிழந்து விட்டது. இந்தப் பேரிடர் நீங்கித் தமிழ் மொழி மீண்டும் முடிசூடி அரியணை ஏறும் என்பதை, அதன் பழையகால வரலாறும், பண்புடைத் தமிழ் மக்களின் தாய் மொழி யார்வமும் புலப்படுத்துகின்றன.

எதிர் காலத்தைச் சிறப்படையச் செய்தற்கு இறந்த காலப் பெருமையை அறிதலும் வேண்டும். மக்களிடையே ஆர்வமுங், கடமையுணர்ச்சியும், ஒற்றுமையும் உண்டாதற்கு இஃது இன்றியமையாதது. எனவே, தமிழ் மொழிக்குப் பேரிடர் ஏற்பட்ட இவ்வாண்டில், தமிழின் முற்காலப் பெருமையை விளக்கும் இந்நூல் வெளியாவது மகிழ்ச்சிக்குரியது.

இந்நூற் கைப்படியை எழுதுதற்கு உதவி செய்த ஆசிரியர் திரு. **அ. தம்பிப்பிள்ளை** அவர்களுக்கும், இதனைச் சிறப்பாக வெளியிடுதற்கு முன்வந்த கலைவாணி புத்தக நிலைய உரிமையாளர் திரு. **கு. வி. தம்பித்துரை** அவர்களுக்கும் என் நன்றி உரியது. வாழ்கதமிழ்! வளர்க தமிழினம்!

"அவ்வையகம்",
வேலணை,
தி. ஆ. 1987, ஆவணி-1.

கா. பொ. இரத்தினம்

பதிப்புரை

தமிழும் சிங்களமும் இலங்கையின் சொந்த மொழிகளாகும். இவற்றுள்ளே எங்கள் தாய் மொழியாகிய தமிழ், சரித்திரம் அறியாத காலந் தொடக்கம்—சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்னரே—ஈழ நாட்டின் மொழியாக இருந்து வரும் பெருமை படைத்தது. இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சி தொடங்கும் வரையும், தமிழ் எவ்விதமான குறைவுமின்றி ஆட்சி மொழியாகவும் விளங்கிவந்தது; ஐரோப்பியர் ஆட்சிக் காலத் திலுஞ் சிங்களத்தோடொத்த உரிமை உடையதாக இருந்தது.

சிங்களத்தையுந் தமிழையும் அரசகரும மொழி யாக்குவதென்று இலங்கையின் ஆட்சி மன்றம்[1] கி. பி. 1944 இல் முடிவு செய்தது. சிங்கள மக் களும் இம்முடிபை ஏற்றனர். இம்முடிபை நடை முறைக்குக் கொண்டுவருவதற்கும் ஒரு விசாரணைக் குழு நிறுவப்பட்டது. சிங்களத்தையும் தமிழையும் விரைவில் அரசகரும மொழியாக்குவதற்கு வேண்டி யன செய்வதற்கு அரசகரும மொழிகள் அலுவலகம் ஒன்றையும் நிறுவினார்கள். அடிமைப் பட்டுக் கிடந்த—தமிழ் வழங்கும் நாடுகளுள்ளே தமிழை அரசகரும மொழியாக்க முதலில் முயன்ற பெருமை இலங்கைக்கே யுரியது. தமிழும் சிங்கள மும் ஒத்த பெருமையுடன் வாழும் என்று தமிழ் மக்கள் யாவரும் நம்பினர்.

---

1. State Council

ஆனால், இப்பொழுது அவர்களுடைய நம்பிக் கைக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டது. இலங்கை அரசினர் 7-7-56 இல் **சிங்களம் மாத்திரமே இலங்கையின் அரசகரும** மொழி என்பதைச் சட்டமாக்கி விட்டனர். தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்ப்பை அவர்கள் சிறிதும் பொருட்படுத்த வில்லை. **இனி இலங்கையிலே தமிழ் வாழுமா? அரசு செய்யுமா? மாளுமா?** என்பனவே இப் பொழுதெழுங் கேள்விகள். பெரும் அறப்போரை நடத்தினாலன்றி நாம் இழந்த உரிமையைப் பெறல் முடியாதுபோலிருக்கிறது.

தமிழ் மொழிக்கு நெருக்கடி ஏற்பட்ட இந் நேரத்தில், இலங்கைக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பையும், இலங்கையில் இன்பத் தமிழ் எவ்வாறு வளர்ந்ததென்பதையும் படிப்போர் உள்ளத்திற் பதியத் தக்கதாக விளக்கும் இந்நூல், இலங்கையில் வாழுந் தமிழ் மக்களுக்கு மாத்திர மன்றிப் பிறநாடுகளில் வாழுந் தமிழ் மக்களுக்கும் பெரும் பயன் அளிக்கும் என்றெண்ணுகிறோம். இந்நூலை அன்புடன் எழுதி யுதவிய ஆசிரியருக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

கண்டி.

கலைவாணி
புத்தக நிலையத்தார்.

உள்ளுறை

(எண்கள் பக்கங்களைக் குறிக்கின்றன)

தொல் குடிகள்–13, தமிழர் ஆட்சி–15, புலவர்களும் புரவலர்களும்–18, ஆதிகாலம்–19, யாழ்ப்பாண அரசர் காலம்–23, ஐரோப்பியராட்சிக் காலம்–25, பல்வகைத் தமிழ்ப் பணிகள்–26, நாவலரும் பிறரும்–28, சங்கப் பாட்டுக்கள்–31, பெருங்காப்பியம்–32, புராணங்கள்–34, பிற பிரபந்தங்கள்–36, தனிப் பாடல்கள்–43, நாடகங்கள்–47, இசைப் பாடல்கள்–49, உரைகள்–51, இலக்கண நூல்கள்–54, உரை நடை நூல்கள்–55, கட்டுரைகள்–58, கண்டனங்கள்–59, சொற்பொழிவுகள்–63, புராண படனம்–65, நூற்பதிப்பு–66, அகராதிகள்–70, கலைக் களஞ்சியம்–72, பத்திரிகைகள்–72, வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும்–73, பல்கலை நூல்கள்–76, மொழிபெயர்ப்பு நூல்கள்–77, ஆங்கிலத்திலே தமிழ்ப் பணி–79, தமிழ்க் கல்வெட்டுக்கள்–80, நாட்டுப் பாடல்கள்–82, பழமொழிகள்–85, பேச்சுத் தமிழ்–87, நிறைவுரை–93.

படங்கள்

கோணேசுவரர் ஆலயம்–10, திருக்கேதீச்சரம்–12, இலங்கையிற்றமிழர் வாழுமிடங்கள்–17, பொலனறுவைச் சிவன் கோயில்கள்–20, 22, நாவலர் பெருமான்–29, கதிர்காமம்–37, நல்லூர்க் கந்தசுவாமி கோயில்–39, வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை–52, சி. வை. தமோதரம் பிள்ளை–67, சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்–69, சுவாமி ஞானப்பிரகாசர்–74, விபுலானந்த அடிகள்–76.

இலங்கையில் இன்பத்தமிழ்

இக்காலத்திற் பல நாடுகளிலே தமிழ் வழங்கி வருகிறது. தென்னிந்தியாவிலும், இலங்கை, பர்மா, மலாயா, பீச்சித் தீவுகள், தென்னுபிரிக்கா முதலிய இடங்களிலும் மூன்றரைக்கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந் நாடுகளுள்ளே தென்னிந்தியா பண்டுதொட்டுத் தமிழகமாக விளங்குகிறது. ஏனைய நாடுகளில் இலங்கை மாத்திரமே மிகப் பழைய காலந்தொடக்கந் தமிழகத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. வடமொழியிலுள்ள இதிகாசங்களாகிய இராமாயணம், பாரதம் என்பனவும் புராணங்கள் பலவும் இரு நாட்டையும் பல துறைகளிலே இணைத்துள்ளன. பழந் தமிழ் நூல்களிலும் இலங்கையினைப் பற்றிய செய்திகள் பலவுள. அவை இலங்கையை ஈழம் எனவுங் கூறுகின்றன[1].

கடல் கொண்ட பழந்தமிழ்க் கண்டமாகிய குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் ஈழம் இலங்கியது[2]. சேர சோழ பாண்டிய நாடுகளுடன் ஈழநாடுஞ் சேர்ந்து மிகப் பெரிய தமிழகமாக விளங்கியது. கடல்

---

1. "ஈழத்துணவுங் காழகத் தாக்கமும்"—பட்டினப்பாலை-191.

2. மொகஞ்சதாரை, காரப்பா முதலிய இடங்களில் எடுக்கப்பட்ட புதைப் பொருள்களிலுள்ள பழைய எழுத்துக்கள், ஐதராபாத்து, மதுரை, திருநெல்வேலி, இலங்கையிலுள்ள கேகாலை முதலிய இடங்களில் வெளிவந்துள்ள புதை பொருள்களிலுங் காணப்படுகின்றன.



கோணேசுவரர் ஆலயம்—திருக்கோணமலை

கோளினல் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னரும் இலங்கை தென்னிந்தியத் தமிழ் நாடுகள் போலத் தமிழினை வளம்படுத்தி வந்துளது; தமிழ்ச் சங்கங்களை நிறுவியுளது; தமிழரசும் பெற்றிருந்தது.

தமிழர்களே யன்றிச் சில சிங்கள மன்னருந் தமிழினை அரசியல் மொழியாகவும், அரண்மனை மொழியாகவுங் கொண்டுளர்[1]. சிங்களப் புலவர்களிற் பலர் தமிழை நன்கு கற்றுச் சிறப்பெய்தினர்; தமிழ் நூல்கள், சிலவற்றைச் சிங்களத்தில் மொழி பெயர்த்துமுளர். புத்த பள்ளிகளிற் பழங்காலந் தொடக்கம் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழிற் புலமை படைத்த புத்த குருமார்கள் இன்றும் பலர் உளர். புத்தகுரு ஒருவர் மணிமேகலையைச் சிங்களத்திலே மொழி பெயர்த்துளர். தென்றமிழ்ப் பாவையாக விளங்கிய கண்ணகிக்குத் தமிழ் நாட்டிலே கோயில் எடுத்த காலத்துக் கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும் இலங்கையிலே கோயில் எடுத்துப் பத்தினித் தெய்வத்தை வழிபட்டான் என்று சிலப்பதிகாரங் கூறுகிறது. கண்டியில் ஆடி மாதத்தில் நடத்தப்படும் "பெரகரா" எனும் விழா முதலிற் கண்ணகிக்கே உரியதாயிருந்தது. கண்டியிலுள்ள தலதாமாளிகைக்குள்ளே கண்ணகி கோயில் இன்றுங் காட்சி அளிக்கின்றது. இன்னும் இலங்கை தேவாரம் பெற்ற திருக்கோணமலை, மாதோட்டம்[2] எனுந் தலங்களி

1. 1546இல் ஆட்சி செய்த புவனேகவாகு மன்னன் தன் கையொப்பத்தைத் தமிழில் எழுதியுளான்.

2. இங்கேதான் திருக்கேதீச்சரம் எனுந் தலமுளது.



திருக்கேதீச்சரம்

னிலும், திருப்புகழ் பெற்ற கதிர்காமத்தினலுஞ் சிறந்து விளங்குகிறது.

தொல்குடிகள்

இத்தகைய இலங்கையின் தொல்குடிகள் இயக்கர்களும் நாகர்களுமேயாவர்[1]. இராவணனுடைய[2] இனத்தவர்களே இயக்கர் எனவும், விசயன் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையிலாதிக்கஞ் செலுத்திய குவேனியும் இந்த இயக்கர் இனத்தைச் சேர்ந்தவளே எனவுஞ் சிலர் கூறுவர். இந்த இயக்கர்களைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கருதுகின்றனர். இவர்கள் ஆரியர்களல்லர் என்பது மகாவமிசம் முதலிய நூல்களாற் புலப்படுகிறது.

நாகர்கள் முற்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ்ந்தனர். புத்தர் பெருமானுடைய காலத்துக்கு முன்னும் பின்னும் இவர்களுடைய ஆட்சி பல நாடுகளிற் சிறந்து விளங்கியது. ஆரியவினத்தைச் சேராத இவர்களைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் எனவுஞ் சிலர் கருதுகின்றனர்[3]. புத்தர் பெருமானுடைய காலத்துக்கு முன்னர் இலங்கையிலும் தென்னிந்

1. மகாவமிசம் 3-7.

2. இராவணனைச் சைவசமயத்தவன் என்கின்றனர். இஃது அவனைத் திராவிட இனத்தவன் - மூத்தகுடித் தமிழன் என்பதை உறுதிப்படுத்துகிறது. அவனுடைய மனைவி மண்டோதரியைத் திருவாசகம் போற்றுகிறது. போப், சேர் யோண் மாசல் முதலியோர் சைவத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும், சைவத்தின் பழமையையும் விளக்கியுளர்.

3. Tamil culture Vol. I. P. 29.

தியாவிலும் வாழ்ந்த நாகர்களின் தாய்மொழி தமிழாகவேயிருந்தது. இந்த நாகர்கள் பழந் தமிழரே என்பாரும் உளர். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த நாகர்கள் தமிழ்ப் புலமையிலும் நாகரிகத்திலுஞ் சிறந்து விளங்கினர். நாகர் இனத்தைச் சேர்ந்த பல புலவர்களையும் வீரர்களையும் பற்றிப் பழந் தமிழ் நூல்களுங் குறிப்பிடுகின்றன. முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் புலவர் முதற்சங்க காலத்தில் வாழ்ந்தார். நன்னுகனூர், மதுரை மருதனிள நாகனூர்[1] முதலிய புலவர்கள் கடைச்சங்க காலத்தவர்கள். நாகபட்டினம், நாகர்கோயில் முதலிய இடங்களும் நாகன், நாகி, நாகமுத்து, நாகமணி, நாகம்மாள் முதலிய பெயர்களும் இன்றும் நாகர்களை நமக்கு நினைவூட்டுகின்றன.

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் முன்னர் நாகதீபம் எனப் பெயர் பெற்று விளங்கிய தென்பது மகாவமிசம் முதலிய நூல்களாற் றெளிவாகப் புலப்படுகிறது. நாகர்கள் நாகரிகமாக வாழ்ந்து ஆண்டுவந்த இந்த நாகதீபத்தினையே மணிமேகலையும் மணிபல்லவமெனக் குறிப்பிடுகிறது. நாகதீபத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த நாகர்களிற் பெரும்பாலானோர் சிங்களராகினர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயன் எனும் அரசகுமாரனையே தங்களுடைய முதல் அரசன் எனச் சிங்கள மக்கள்

1. நாகனூர் என்னும் பெயரையுடைய கடைச்சங்க காலப் புலவர்கள் பதினைவர் உளர். நாகன் றேவனூர் எனும் பெயருடனும் ஒருவர் உளர்.

கொண்டாடுகின்றனர்[1]. அவனுடன் வந்த வீரர்களும் இயக்கர்களும் நாகர்களுந் தமிழர்களுங் கலந்து ஏற்பட்ட சாதியினரே சிங்களராவர்[2]. இவர்களுடைய மொழியாகிய சிங்களந் தோன்றுவதற்கு முன் இலங்கையிற் றமிழே வழங்கிவந்தது[3]. சிங்கள மொழியையுந் தமிழ் வளம்படுத்தி வருகிறது. சிங்களமொழிச் சொற்களிற் பெரும்பாலன தமிழ்ச் சொற்களேயாகும். தமிழிலிருந்தே சிங்களமொழி தோன்றியதென்றுஞ் சிலர் கருதுகின்றனர்[4].

தமிழர் ஆட்சி

சிங்களர்கள் தோன்றுவதற்கு முன்னரும் இலங்கையிலே தமிழர் வாழ்ந்தனர். விசயன் காலத்தின் பின்னருந் தென்னிந்தியாவிலிருந்து பல தமிழர்கள் வந்து இலங்கையிற் குடியேறியுளர். இக்குடியேற்றம் இன்றுவரையும் இடையிடையே நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது. தமிழ் வீரர்களும், சோழ பாண்டிய மன்னர்களும் படையெடுத்து வந்து இலங்கையை வென்று ஆண்ட காலங்களிலுந் தமிழர் பலர் இங்கு வந்துளர். இவ்வாறு இலங்கைபுக்குப் பெருகிய தமிழர்கள் இப்பொழுது இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர்[5]. மத்திய பகுதியில் வாழுந் தமிழ்

1. விசயனும் பின்னர்த் தோன்றிய பல சிங்கள மன்னர்களும் தமிழ் நாட்டிளவரசிகளையே மணந்தனர்.

2. இலங்கைப் பூர்வ சரித்திரம் ப. 13.

3. Tamil culture Vol I. P. 30.

4. Dravidian Origin and Philosophy of Human Speech—Father Ad T. C. Closset.

5. இலங்கையிலுள்ள சோனகர்களின் தாய் மொழியும் தமிழே. இவர்களுடைய தொகை 4,68,000. தமிழ்ப் பேசும்

மக்கள் தேயிலை இறப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்காகச் சென்ற நூற்றுண்டிலும் இந்நூற்றுண்டிலும் வந்து குடியேறியவர்கள். இவர்களின் தொகை ஒன்பதிலட்சத்து நாற்பத்தையாயிரம்[1]. இவர்களிற் சிலர் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்து கொண்டனர். குடியுரிமை வேண்டி விண்ணப்பித்தோர் பலருக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டுளது. தங்கள் குடியுரிமையைப் பெறுவதற்கு இவர்கள் பலவாறு முயல்கிறுர்கள். இவர்களுக்குக் குடியுரிமை அளிப்பதுபற்றி இந்திய அரசினரும் இலங்கை அரசினரும் இன்னும் ஒரு நன்முடிவுக்கு வரவில்லை.

வட மாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் வாழுந் தமிழர்கள் மிகப் பழைய காலந்தொடக்கம் வாழையடி வாழையாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தொகை ஒன்பதிலட்சத்து முப்பத்தெண்ணுயிரம்[2]. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் இந்த இரு மாகாணங்களையும் **ஈழத் தமிழகம்** எனலாம். இவ்வீழத்தமிழகம் இலங்கையின் பரப்பில் மூன்றிலொரு பகுதியாகும்[3]. இப்பகுதியில் வாழுந் தமிழர்களின் முன்னேர் யாழ்ப்பாணத்திலே கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிலே தமிழ் அரசினை நிலைநாட்டினுர்கள்.

மக்களின் மொத்தத் தொகை 24 இலட்சம்; மொத்தக் குடிசனத்தில் 29%. இலங்கையில் சிங்களர்களுக்கு அடுத்த மிகத் தொகையான இனத்தவர்கள் தமிழரேயாவர்.

1, 2. 1955க் குடிசன மதிப்பின்படி.

3. இலங்கையின் மொத்தப் பரப்பு 25,332 சதுர மைல். வடமாகாணம் 3429 சதுர மைல்; கீழ் மாகாணம் 3840 மைல். குடிசனம் :—இலங்கை 83 இலட்சம்; வடமாகாணம் 5,71,000; கீழ் மாகாணம் 3,55,000.


இலங்கையிற்றமிழர்
வாழும் இடங்கள்
95% மேல் தமிழர்
ஈழத்தமிழகம்
45% தமிழர்
திருவடிநிலை
கீரிமலை
ஊர்காவற்றுறை
யாழ்ப்பாணம்
முல்லைத்தீவு
இராமேசுவரம்
வட
மாகாணம்
மன்னர்
திருக்கேதீச்சரம்
வவுனியா
திருக்கோணமலை
அநுராதபுரம்
புத்தளம்
பொலநறுவை
மட்டக்களப்பு
மாகாணம்
சிலாபம்
குருநாக்கல்
கண்டி
நுவரெலியா
வதுளை
கொழும்பு
இரத்தினபுரி
கதிர் காமம்
காலி
10
9
8
7
6
80
81
82

வட இலங்கையை மாத்திரமன்றி இலங்கை முழுவதையும் இடையிடையே ஆண்டார்கள். யாழ்ப்பாணத்திற் றமிழரசு தொடங்குவதற்கு முன்னரும் தமிழர்கள் இலங்கை முழுவதையும் இடையிடையே ஆண்டார்கள். கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் இலங்கை முழுவதையும் ஆண்ட எல்லாளன் எனுந் தமிழ் மன்னன் பகைவரும் போற்றும் பண்புடையவனுக விளங்கினுன். பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் முதலாம் இராசராசன் எனும் சோழ மன்னன் இலங்கையை வென்று பொலனறுவையைத் தலைநகராக்கி ஆண்டான். பதினெராம் நூற்றுண்டிலும் இலங்கை முழுவதும் மும்முடிச் சோழமண்டலம் எனும் பெயருடன் சோழர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

யாழ்ப்பாண அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என வழங்கப்பட்டனர். இவர்கள் பதினேழாம் நூற்றுண்டு வரையும்—போர்த்துக்கீசர் இலங்கையிற்றம் ஆட்சியை நிறுவின காலம் வரையும்—யாழ்ப்பாணத்தையும் வடஇலங்கையையும் ஆண்டனர்.

புலவர்களும் புரவலர்களும்

யாழ்ப்பாண அரசர்களுடைய காலத்திலும் அதற்கு முன்னரும், போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இலங்கையை ஆண்ட காலங்களிலும் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தமிழ் மொழியினை நன்கு வளர்த்து வந்தனர். தமிழரசர்களும் வள்ளல்களும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். இடையிடையே சிங்கள அரசர்களுடைய ஆதரவும் தமிழ்ப் புலவர்களுக்குக் கிடைத்தது.

தென்னிந்தியாவிலிருந்து புகழேந்திப் புலவர், அந்தகக்கவி வீரராகவர் முதலிய புலவர்கள் ஈழ நாட்டிற்கு வந்து பரிசில்கள் பெற்றுச் சென்றனர் என்பர். புலவர்களுக்கு அரசர்களும் குடிமக்களும் அளவின்றிப் பரிசில் ஈந்தனர். யாழ்ப்பாணக்குடா நாட்டின் ஒரு பகுதி தொண்டை நாட்டிலிருந்து வந்த யாழ்ப்பாணனுக்குப் பரிசிலாக அளிக்கப்பட்டதாற் பின்னர் குடாநாடு முழுவதும் யாழ்ப்பாணம் எனும் பெயர் பெற்றதென்பர்[1]. ஈழத்தவர் புலவர்களுக்கு வரையாதீந்த இப் பெருஞ்சிறப்பினைச் சின்னத்தம்பிப் புலவர்,

"பண்ணிற் றேயப் பொருள்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழமண்டல நாடெங்க ளூடே"[2]

எனும் பாட்டினுற் புலப்படுத்தினர். இவ்வாறு புலவர் போற்றும் புகழ்படைத்த ஈழநாட்டிலே வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் செய்த தமிழ்ப் பணிகளும் அவர்களியற்றிய நூல்களும் பலவாகும்.

ஆதிகாலம்

கடைச்சங்க காலத்திலே தோன்றிய நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றிலே ஈழத்துப் பூதன்றேவனார் பாடிய ஏழு பாடல்கள் காணப்படுகின்றன. பூதன்றேவனார் ஈழ நாட்டிலிருந்து தமிழ் நாடு சென்று அங்கே

1. யாழ்ப்பாண வைபவமாலை பக். 23; யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 37.

2. பருளைப் பள்ளு.



பொலனறுவைச் சிவன் கோயில்.

(பக்கம் 21)

மதுரையிற் றங்கித் தமிழ்ப் பாடல்களைப் பாடினர். கடைச்சங்க காலத்தில் ஈழத்திலே தமிழ்ப் புலமை யுடையார் பலர் இருந்தனர் என்பதை இவருடைய வரலாறு புலப்படுத்துகிறது. இவருக்குப் பின் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டு வரை ஈழத்திலே தோன்றிய தமிழ்ப் புலவர்களைப்பற்றி யாதும் அறிய முடியவில்லை. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தரும், ஒன்பதாம் நூற்றுண்டினராகிய சுந் தரரும் திருக்கோணமலை திருக்கேதீச்சரம் எனுந் தலங்கள்மேற் றேவாரம் பாடியுளர். இதனுல் அவர்களுடைய காலத்திலே இத்தலங்கள் மிகச் சிறந்தனவாயிருந்தன என்பதும், சைவசமயம் இலங்கையிற் பொலிந்ததென்பதும் வெளிப்படை. ஆகவே, அக்காலத்திலே இருந்த தமிழ் மக்கள் சமயத்திலும் தமிழிலும் ஆர்வமுடையவர்களாகவே இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

பத்தாம் பதினேராம் நூற்றுண்டுகளிற் சோழ மன்னர் ஆட்சி இலங்கையில் நிலவிய பொழுது தமிழ் மொழியும் சைவ சமயமும் உயர்ந்த நிலையை அடைந்திருக்குமன்றே! முதலாம் இராசராசன் பொலனறுவையில்[1] ஒரு சிவாலயத்தைக்[2] கட்டு வித்தான். இவ்வாலயத்திற் சோழ மன்னர்கள் இருவருடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சோழ மன்னருடைய ஆட்சிமுறைகளையும் சிற்ப முறைகளையும் நீர்ப்பாய்ச்சல் முறைகளையும்

---

1. பொலனறுவை, சோழர் காலத்திற் புலைநரியான சன நாதபுரம் என வழங்கப்பட்டது.

2. வானவன்மாதேவி ஈசுரமுடையார் என்பது இச்சிவா லயத்தின் பெயர்.



பொலனறுவைச் சிவன் கோயில்

இலங்கை மக்கள் பின்பற்றிப் பெரும்பயனடைந்தனர்.[1]

பதின்மூன்ரும் நூற்ருண்டிற் பாண்டியர்களின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டது. இருபது ஆண்டுகளுக்குமேற் பாண்டிய மன்னருடைய ஆட்சியில் இலங்கை இருந்தது. இக்காலத்திலும் இலங்கையிற் சைவமும் தமிழும் சிறந்தோங்கியிருத்தல் வேண்டும். இலங்கையிற் சோழராட்சிக்கும் பாண்டியராட்சிக்குமிடையிற் பொலனறுவையிற் பல கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றுள் இப்பொழுது நிலைத்திருப்பன இரு கோயில்களே. ஏனையவெல்லாம் அழிக்கப்பட்டன. இந்த இரண்டுஞ் சிவாலயங்களாகும். இவற்றுள் ஒன்று இராசராசனுற் கட்டப்பட்டது. மற்றையது பாண்டிய சிற்ப முறையைத் தழுவிப் பதின்மூன்ரும் நூற்ருண்டிற் கட்டப்பட்டது. இந்தக் கோயிலே[2] இலங்கையிலுள்ள சைவ ஆலயங்களுள் மிகச் சிறந்ததென்பர் ஆனந்தக் குமாரசுவாமி எனும் அறிஞர்.

யாழ்ப்பாண அரசர் காலம்

யாழ்ப்பாணத் தமிழ் அரசு பதின்மூன்ரும் நூற்ருண்டிலே தொடங்கியதால் இந்நூற்ருண்டிலும் அடுத்த நூற்ருண்டிலும் தமிழ் வளர்ச்சி சிறப்பெய்திற்று. தமிழ்ச் சங்கம் ஒன்றும்,[3] சரசு

---

1. Indian Architecture Vol. I. P. 205.
   Ceylon and Indian History P. 265.
2. பக்கம் 22.
3. கைலாய மாலை பக். 209, 210.

வதி மகாலயம் என்னும் நூல் நிலையமொன்றும் யாழ்ப்பாணத்துக்குப் பெருமையளித்தன. பிற நாடுகளிலிருந்தும் புலவர்கள் வந்து தமிழை ஓம்பினர். பராக்கிரமவாகு என்னும் சிங்கள மன்னனுடைய அவையிற் போசராச பண்டிதர் என்னும் புலவர் பெருமான் ஒருவர் அமைச்சராக இருந்தார். இவரைச் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதினவர் என்பாருமுளர். இன்னும் இந்நூற்றுண்டிலே, செயவீரசிங்கையாரியன் எனும் செகராசசேகர மன்னன் காலத்திலே செகராசசேகரம் எனும் வைத்திய நூலும், செகராசசேகரமாலையென்னும் சோதிட நூலும், கணக்கதிகாரம் எனும் கணித நூலும் தோன்றின. பண்டிதராசர் எனும் புலவர் இம்மன்னன் காலத்திலேயே தக்கிண கைலாச புராணத்தை யியற்றினர் என்பர் சிலர். கோணேசர் கல்வெட்டினையும் இக்காலத்திலேயே கவிராசர் பாடினர் என்பாருமுளர்.

பதினைந்தாம் நூற்றுண்டின் றொடக்கத்திற் குணவீரசிங்கையாரியன் காலத்திற் பரராசசேகரம் எனும் வைத்திய நூல் தோன்றிற்று. பரராசசேகர மன்னன் காலத்தில் இரகுவமிசத்தை அம்மன்னன் மைத்துனராகிய அரசகேசரி பாடினர். பரராசசேகரன் உலாவும் இக்காலத்திலேயே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

பதினாறும் நூற்றுண்டிற் போர்த்துக்கீசர் இலங்கையை ஆளத் தொடங்கினர். இந்நூற்றுண்டிற் கதிரைமலைப் பள்ளுத் தோன்றியதென்பர். இந்நூற்றுண்டினிறுதியி லாண்ட எதிர் மன்ன பரராசசேகரன் காலத்தில் அந்தகக்கவி வீரராகவ முதலியார் யாழ்ப்பாணம் வந்து அரச

னிடம் பரிசில் பெற்றுச் சென்றனர். இவர் இம் மன்னன்மேற் பல பாடல்கள் பாடியுளர்.

ஐரோப்பியராட்சிக் காலம்

பதினேழாம் நூற்ருண்டுத் தொடக்கத்திலே, சங்கிலி என்னும் அரசன் காலத்திலே, போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைத் தங்கள் ஆட்சிக்குட்படுத்தினர்.[1] இதனுல் நான்கு நூற்ருண்டுகளாக இடையீடின்றிச் சிறந்து விளங்கிய யாழ்ப்பாண அரசும் முடிவடைந்தது. இந்நூற்ருண்டின் நடுப்பகுதியில் இலங்கையிலே போர்த்துக்கீசரின் ஆட்சி ஒழிய, ஒல்லாந்தருடைய ஆட்சி ஏற்பட்டது. போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்தைப் பரப்பப் பல முயற்சிகள் செய்தனர். இவற்றின் பயனுகத் தமிழ் மக்கள் பலர் கத்தோலிக்கராயினர். இந் நூற்ருண்டிலே திருநெல்வேலியிலிருந்த ஞானப் பிரகாசர் என்பார் ஆட்சியாளருடைய கொடுங் கோலுக்கஞ்சி இந்தியாவிற்குச் சென்று பல கலை களையுங்கற்று அங்கே புகழ் பெற்ற அறிஞராக விளங்கினுர். இவர் வடமொழியிற் பல நூல்களை இயற்றியுளர். சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கும் ஓருரை எழுதினுர். சிதம்பரத்திலுள்ள ஞானப் பிரகாசம் எனுங்குளத்தையும் இவர் வெட்டுவித்தார். இந்நூற்ருண்டிலே கத்தோலிக்க சமய நூல்கள் சில தமிழில் எழுதப்பட்டன. சந்தியோகுமையோர் அம்மானை, ஞானப்பள்ளு முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தெல்லிப் பழைப் பேதுருப் புலவர் பாடினுர்.

பதினெட்டாம் நூற்ருண்டிலே தமிழ்மொழி

1. கி. பி. 1619இல்.

கண்டி இராச்சியத்தின் அரசாங்க மொழியாக விளங்கிற்று[1]. 1815 ஆம் ஆண்டிற் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன் படிக்கையிற் றமிழிலேயே கையெழுத்திட்டனர். இந்த நூற்றுண்டின் முற்பகுதியிலே சின்னத் தம்பிப் புலவர், வரத பண்டிதர், மயில்வாகனப் புலவர், சிற்றம்பலப் புலவர், புலவன் விநாயகர் முதலியோர் விளங்கினர். கூழங்கைத் தம்பிரான் எனும் புலவர் பெருந்தகையும் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து தமிழ்ப்பணி பல செய்தார். பிலிப்பு தே மெல்லோ என்பவரும் தமிழறிவு மிக்கவராக விளங்கினர்; புதிய ஏற்பாட்டினைத் தமிழில் மொழி பெயர்த்துப் பதிப்பித்தார்.

பல்வகைத் தமிழ்ப் பணிகள்

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இந்த இருபதாம் நூற்றுண்டிலும் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த காலத்தில் ஈழத்திலே தோன்றித் தமிழ் வளர்த்து இறந்தும் இறவாப்புகழ் பெற்றோர் பலராவர். தமிழ் மொழியின் வளர்ச்சி கருதிப் பல்வேறு—புதுப் புதுத்துறைகளிலும் இந்தக் காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் உழைத்துளர். தமிழ் நாட்டுக்குப் பல துறைகளிலே வழிகாட்டிகளாகவும் அமைந்தனர். இவர்கள் செய்த தமிழ்ப் பணிகள் பலவாகும். சிறந்த காப்பியங்களை இயற்றினார்கள்; பல தனிப் பாடல்களைப் பாடினார்கள்; இலக்கண நூல்களை எழுதினார்கள். பழந்தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அச்சிட்டுப்

1. கண்டியிலிருந்து இலங்கையை ஆண்ட கடைசி மன்னர்கள் நால்வரும் தமிழர்களேயாவர்.

பரப்பினார்கள். நூல்களை அச்சிடுதற்கும் பத்திரிகைகளை வெளியிடுதற்கும் இந்த ஈழ நாட்டிலன்றித் தென்னிந்திய நாட்டிலும் அச்சகங்களை நிறுவினார்கள். செய்யுணூல்களுக்கு உரை எழுதினார்கள்; நவீனங்கள் கதைகள் முதலிய புது வகையான இலக்கியங்களையும் இயற்றினார்கள்; மறுப்புரைகள், கட்டுரைகள், கடிதம் முதலியவற்றை எழுதினார்கள்; நாடகங்களையும், இசைப் பாடல்களையும் நல்கினார்கள்; தமிழ் நாடெங்கும் சைவப் பிரசங்கங்கள் செய்தார்கள்; தமிழ் நாட்டில் ஆசிரியர்களாகவுஞ் சேவை புரிந்தார்கள்; அகராதிகள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டார்கள்; கலைக்களஞ்சியமும் ஆக்கினார்கள்; பிற மொழி நூல்களைத் தமிழிலிலே தந்தார்கள்; பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியிற் பெயர்த்தார்கள்; சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டார்கள்; சரித்திர நூல்கள் பல எழுதினார்கள்; சொற் பிறப்பாராய்ச்சியிலும் சிறந்து விளங்கினார்கள்; வடமொழி, சிங்களம்[1], ஆங்கிலம், இடச்சு மொழி, போர்த்துக்கீசர் மொழி முதலியவற்றிலும் புலமை பெற்றுயர்ந்தார்கள்; தாம் பெற்ற புலமையினாலே தமிழை வளம்படுத்தினார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. பட்டத்தையும் முதன் முதலாகப் பெற்றார்கள்; பட்டப்படிப்பைத் தமிழ் வளர்ச்சிக்கே பயன்படுத்தினார்கள்; தமிழ் நூல்

1. உமக்க சாதகம், இராசாவலியம் எனும் இரு சிங்கள இலக்கண நூல்களையும் இயற்றினவர்கள் தமிழறிஞர்களே. ஏ. சி. நமசிவாய முதலியார் குடும்ப சமிரச்சணி எனுங் கதைக் கொத்தைச் சிங்களத்தில் எழுதினார்; பஞ்ச தந்திரத்தையும் சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

களை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தார்கள்; ஏக சந்தக் கிரகிகளாகவும், அட்டாவதானிகளாகவும், தசாவதானிகளாகவும் பொலிந்தார்கள்; நாவலர்களாகவும் மகா வித்துவான்களாகவும், இலக்கணக் கொத்தர்களாகவும், தர்க்ககுடாரதாலுதாரிகளாகவும் இலங்கினுர்கள்.

நாவலரும் பிறரும்

யாழ்ப்பாணத்துத் தமிழைச் "செந்தமிழ், தீந்தமிழ், இலக்க்ணத் தமிழ், யாழிசைத் தமிழ்" எனப் பலவாறு தென்னிந்தியத் தமிழறிஞர்கள் புகழ்வர். இப் பெருமையினை யாழ்ப்பாணத்துக்கு அளித்தற்கு உழைத்த பெரியார்கள் பலர். அவர்களுள்ளே மிகச் சிறந்தவர் ஆறுமுக நாவலராவார். அவருடைய காலத்திலும் இக்காலத்திலும் அவரைப் போலத் த்மிழையுஞ் சைவத்தையும் தழைத்தோங்கச் செய்தவர் ஒருவருமில்லை என்பதறிஞர் கருத்தாகும். சி.'வை. தாமோதரம் பிள்ளையவர்கள், அறிஞராலே தமிழ் வளர்த்த 'தாமோதரனுர்' எனப் போற்றப்பட்டார். சேனுதிராய முதலியார், கனக சபைப் பிள்ளை, கனகசுந்தரம் பிள்ளை, கதிரைவேற் பிள்ளை, சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், சுவமிநாத பண்டிதர், விசுவநாத பிள்ளை, பொன்னம்பலப் பிள்ளை, வேற்பிள்ளை, குமார சுவாமிப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள், சோமசுந்தரப் புலவர், நவநீதகிருட்டின பாரதியார், பண்டிதர் நல்லதம்பி முதலிய பேரறிஞர்களுடைய புகழ் பிறநாடுகளிலும் பரவியுளது. அரசியற்றுறையில் மாத்திரமன்றித் தமிழ் வளர்ச்சிக்குந் தொண்டாற்றிய சேர். பொன்.

நாவலர் பெருமான்

அருணுசலம், சேர். பொன். இராமநாதன் எனும் இரு பேரறிஞர்களும், கலைமாச் செல்வராய் விளங்கிய ஆனந்தக் குமாரசுவாமி அவர்களும் உலகம் புகழுஞ் சிறப்புப் பெற்றவர்கள்.

இலங்கையில் வாழும் சோனக மக்களும் தமிழார்வமும் தமிழ்ப் புலமையும் நிறைந்தவர்கள். ஆசுகவி பாடுந்திறன் கைவரப் பெற்ற பலர், இவர் களிடையே தோன்றியுளர். இவர்கள் பாடிய பாடல்கள் பலவாகும். அசனுலெப்பை என்பார் புகழ்ப்பாவணி எனும் ஒரு சிறு நூலைப் பாடியுளர்.

பத்தொன்பதாம் நூற்ருண்டிலே அமெரிக்க மிசனறிமாரும் தமிழினை வளர்த்தற்குப் பேருதவி செய்துளர். வட்டுக்கோட்டையிலே அவர்கள் நிறுவிய "செமினரி" எனுங் கலாசாலை பல சிறந்த அறிஞர்களைத் தமிழ் நாட்டுக்குத் தந்தது. இவ் வறிஞர்களிற் பலர் சாத்திர நூல்கள் பலவற்றைத் தமிழிலே இயற்றிஞர்கள். அமெரிக்காவிலிருந்து வந்த பாதிரிமார்களும் தமிழை விரும்பிக் கற்றனர். மருத்துவ கலாநிதி கிறீன் என்பார் வைத்திய சாத்திரத்தைத் தமிழிலே கற்பித்தார். இக்காலத் திலே வைத்தியம், கணிதம் முதலிய கலைகளைத் தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கமுடியுமா என்று சிலர் கேட்கிருர்கள். இவர்களுக்கு, நூறு வருடங் களுக்கு முன்னரே கலாநிதி கிறீன் அவர்கள் விடை கூறியுளர்.

இனி, ஈழநாட்டிலே இப்பொழுது வாழ்ந்து வரும் தமிழறிஞர்கள் செய்துவருந் தமிழ்ப் பணி களைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்களாதலின் அவற்றை விடுத்து, ஈழத்துப் பூதன்றேவஞர் காலந்தொடக்கம் ஈழத்திலே தோன்றிப் புகழ்நாட்டி

மறைந்த புலவர் பெருமக்கள் செய்த தமிழ்ப் பணிகளை வகுத்துக் காண்போம்.

சங்கப் பாட்டுக்கள்

ஈழத்துப் பூதன்றேவனுர் பாடிய சங்கப் பாட்டுக்களைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டேன். பூதன்றேவனுர் எனும் பெயருடன் வேருெரு புலவரும் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்து பாடல்களை இயற்றியுளர். இவரினின்றும் பிரித்தறிதற்கு நம் நாட்டுப் புலவருக்கு ஈழத்துப் பூதன்றேவனுர் என்று பெயரிட்டனர் போலும்! அன்றியும் அக்காலத்திலே ஊர்ப்பெயரைப் புலவர்களுடைய பெயர்களுடன் சேர்த்து வழங்குதலும் பெருவழக்கு.

ஈழத்துப் பூதன்றேவனுர் பாடிய பாடல்களில், அகநானூற்றில் மூன்றும், குறுந்தொகையில் மூன்றும், நற்றிணையில் ஒன்றுஞ் சேர்க்கப்பட்டுள. குறுந்தொகையிற் சேர்க்கப்பட்டவற்றுள் ஒன்றைக் கீழே காண்க.

"வெறியென உணர்ந்த வேல னேய் மருந்து
அறியா ருகுதல் அன்னை காணிய
அரும் படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குரல் ஏனல்
உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
இலங்குமலை நாடன் இரவி னுனே"[1]

---

1. காணிய - காணும் பொருட்டு, படர் - நினைவு, எவ்வம் - துன்பம், தில்ல - இடைச்சொல், குரலேனன் - கதிரையுடைய தினை, குளிர் - கிளிகடியுங் கருவி. சிலம்பும் - ஒலிக்கும்.

இராக் காலத்திலே தலைவன் தலைவியிடம் வந்துபோகத் தொடங்கினான். இராக் காலத்திற் றலைவன் தனிமையாக வரும் வழியிலுள்ள இடையூறுகளையுந் தன்னைச் சுற்றியுள்ள காவல்களையும் எண்ணி எண்ணித் தலைவி வருந்தினாள். இவ் வருத்தம் அவளுடைய உள்ளத்திலும் உடலிலும் புலப்பட்டது. தலைவியுடைய இந்த வேறுபாட்டைக் கண்ட தாய், வேலனை அழைத்து வெறியாடல் எடுத்து அதனைத் தீர்க்க எண்ணினாள். இதை அறிந்த தோழி தலைவியிடஞ் சென்று இந்தச் செய்தியை அச்சத்துடன் உரைத்தாள். அதைக் கேட்ட தலைவி தோழிக்குக் கூறியவற்றை இந்தப் பாட்டுக் குறிப்பிடுகிறது.

'தோழியே! தலைவன் வராவிடில் என் நோய் கூடும். வெறியாட்டினால் அது தீராது மேலும் மேலும் மிகும். என் நோய்க்கு வெறியாட்டு மருந்தன்று என்பதைத் தாய் அறிவாள். உண்மையை அவள் உணர வாய்ப்பு உண்டாகும். ஆகையாற் றலைவன் வராதிருத்தல் இப்பொழுது துன்பந் தருவதாயினும் பின்னர் நன்மை தரும்.' என்பதிதன் கருத்து.

தலைவன் வழக்கப்படி வீட்டுப் புறத்துக்கு வந்து மறைந்து நிற்கிறான். அவனிதனைக் கேட்டு ஆவன செய்தற்காகத் தோழிக்குச் சொல்வது போலத் தலைவி இதனைச் சொன்னாள்.

பெருங்காப்பியம்

ஈழநாட்டிற் றோன்றிய பிரபந்தங்களுள் அரச கேசரி ஆக்கிய இரகுவமிசமே சிறந்த பெருங் காப்பியமாக விளங்குகிறது. அரசகேசரியின்

காலத்தைச் சிலர் பதினைந்தாம் நூற்றாண்டென்றுஞ் சிலர் பதினாறும் நூற்றாண்டென்றுங் கூறுவர். இவர் வடமொழியிலே காளிதாசர் இயற்றிய இரகுவமிசத்தை மொழிபெயர்த்துப் பன்னயங்களும் மிளிரத் தமிழிலே பாடினார். இவர் பாடிய காப்பியத்தில் இருபத்தாறு படலங்களும் ஈராயிரத்து நானூறுக்கு மேற்பட்ட செய்யுள்களுமுள. இச் செய்யுள்கள் யாவும் அரசகேசரியாருடைய இருமொழிப் புலமையையும், பழந்தமிழ் நூல்களின் பயிற்சியையுங், கற்பனைத்திறனையும் நன்கு காட்டுந் தகையன. வடமொழி தென்மொழிகளில் வல்லார்க்கே இலகுவில் விளங்கத் தக்கன; முதனூலிலுள்ள சுலோகங்களின் போக்கை முற்றுந் தழுவிப் பாடப்பட்டன; கம்பராமாயணத்துக் கூறப்படாத சில நுட்பங்களைச் செம்மையாகப் புலப்படுத்துவன. "கற்றார் கவியின் பெரிதாந் தமிழ்க் கம்ப நாடன் உற்றாங்குரைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்" என ஆசிரியரே கூறியுளர். இத்தகைய அரும்பெருங் காப்பியத்தை யாழ்ப்பாணப் புலவர்கள் பலர், 'ஆசிரியர்—மாணாக்கர் பரம்பரையாகக்' கற்று வந்துளர். சுன்னைக் குமாரசாமிப் புலவர் இக்காப்பியத்தின் அருஞ் செய்யுள்கள் சிலவற்றிற்குப் பொருள் எழுதி, "இரகுவமிசக் கருப்பொருள்" எனும் பெயருடன் வெளியிட்டுளர்.[1] இக் காப்பியத்தில் ஒரு செய்யுளைப் படித்து மேற்செல்வோம்.

"இட்ட மெத்திய வெய்யவர் இடுக்கண்வந் திறுத்தான்
முட்ட வத்தலைப் பகைவரா குவரென முன்னோர்

1. வித்துவான் சி. கணேசையர் அவர்கள் இந்நூலுக்குச் சிறந்ததோருரை எழுதியிருக்கிறார்.

பட்டு ரைத்தன காட்டுமா பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக் கனையே "[1]

புராணங்கள்

பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளிலும் பின்னரும் தமிழ் நாட்டிலே சிறப்பாகத் தலபுராணங்களும் பொதுவாகப் பிற புராணங்களும் தோன்றின. ஈழநாட்டுப் புலவர்களும் சில புராணங்களைப் பாடினார்கள். இப்புராணங்களுள் மிகப் பழையதாகக் கருதப்படுவது பண்டிதராசர் இயற்றிய தக்கிண கைலாச புராணமாகும். இது கோணாசல புராணம் எனவும்படும். ஈழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருக்கோணமலையே தக்கிண கைலாசம் எனப்படும். இத் தக்கிண கைலாச புராணத்திலுள்ள செய்யுளொன்றை ஈண்டுக் காண்க.

" பூவெலாம் துய்ய வாசம்[2]
புனமெலா முனிவர் வாசம்[3]
மாவெலாங் குயிலின்[4] ஓசை
மலையெலாங் குயிலின்[5] ஓசை
காவெலாம் உயர்ந்த தாழை[6]
கரையெலாங் கமழுந் தாழை[7]
பாவெலாம் அரனார்[8] தஞ்சீர்[9]
பகர்வரிது அன்னோர் தஞ்சீர்."

சிவராத்திரி ஏகாதாசி விரதங்களின் பெருமையை முறையே கூறும் சிவராத்திரி புராணத்தை

---

1. வெய்யவர் - கொடியவர், சூரியர் ; பானு - சூரியன் ; பரியும் - வருந்தும் ; கட்ட - பிடுங்கிய ; கள் - தலை ; கொட்டை - பொகுட்டு ; சரோருகம் - தாமரை ; கனை காட்டும் என முடிக்குக.

2. நறுமணம், 3. இருப்பிடம், 4. பறவை, 5. முகில், 6. தென்னை, 7. தாழை மரம், 8. சிவன், 9. சிறப்பு.

யும் ஏகாதாசிப் புராணத்தையும் வரதபண்டிதர் பாடினர். புலியூர்ப் புராணம், சிதம்பர சபாநாத புராணம் என்பன முறையே வித்துவான் சிவானந்தையர், சபாபதி நாவலர் என்போரால் இயற்றப்பட்டன. தொம்பிலிப்பு என்பார் பாடிய ஞானனந்த புராணமும் கூழங்கைத் தம்பிரான் யாத்த யோசேப்பு புராணமும், கனகசபைப் புலவர் இயற்றிய திருவாக்குப் புராணமுங் கிறித்துமதச் சார்பானவை. புலவர்கள் சிலர் பல்வேறு வகையான நூல்களைப் பாடி அவற்றுக்கும் புராணமெனப் பெயர் கொடுத்துளர். மிகப் புதுமையான பெயர்களையுடைய புராணங்களுஞ் சில உள. சூது புராணம் அப்புக்குட்டி ஐயராலும், வலைவீசு புராணம் முத்துக் குமாரராலும் சாதி நிர்ணய புராணம் வல்வை வயித்திலிங்கத்தாலும் பாடப்பட்டன. கனகி புராணம், கனகி எனுந் தாசிமேற் சுப்பையா என்பவராற் பாடப்பட்டது. பெயரளவிலே புராணமாகப் பாடப்பட்ட இந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை. எனினும், இதிலுள்ள செய்யுள்களைத் தமிழார்வமுடையார் பலர் அறிவர். இதிலுள்ள புதுமையான செய்யுள்களில் ஒன்றைக் காண்க :

“ நடந்தாளொரு கன்னி மாராச
    கேசரி நாட்டிற்கொங்கைக்
குடந்தா னசைய வொயிலா
    யதுகண்டு கொற்றவரும்
தொடர்ந்தார் சந்நியாசிகள் யோகம்விட்
    டார்சுத்த சைவரெல்லாம்
மடந்தான் அடைத்துச் சிவபூசை
    யும்கட்டி வைத்தனரே.”[1]

1. இப்பாடலினை பாடியவர் வேறொருவர் என்பாருமுளர்.

மட்டக்களப்பு அறிஞர் **பூபால பிள்ளை** என்பார் சீமந்தனி புராணத்தைப் பாடினர். தமிழ் வளர்ச்சி கருதிப் பல்வேறு துறைகளில் உழைத்த நாவலர் பெருமானும் தேவகோட்டைப் புராணம் என்றொரு புராணத்தைப் பாடத் தொடங்கி அதனை முடித்தற்கு முன் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பர்.

பிற பிரபந்தங்கள்

இடைக்காலந் தொடக்கம் சென்ற நூற்றண்டு வரையும் கோவை, பள்ளு, அந்தாதி, உலா, குறவஞ்சி, தூது, கலம்பகம், சதகம் முதலிய பல பிரபந்தங்கள் தமிழகத்திலே பன்னூற்றுக் கணக்காகத் தோன்றித் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தியுள்ளன. இப்பிரபந்தங்கள் யாவும் சிறுபான்மையாக வள்ளல்கள், அரசர்கள், முதலியோர் மீதும் பெரும்பான்மையாகத் தெய்வங்கள் மேலும் பாடப்பட்டவையாகும்.

ஈழ நாட்டிலே கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், வண்ணை பண்ணை முதலிய தலங்களில் எழுந்தருளியிருக்குந் தெய்வங்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் பலவாகும். இத்தலங்களை முறையே கதிரை, நல்லை, மாவை, வண்ணை எனப் புலவர்கள் வழங்கினர். ஈழநாட்டுத் தலங்களில் மாத்திரமன்றித் தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரம், வேதாரணியம், கும்பகோணம் முதலிய தலங்களிலும் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மேலும் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் பல பிரபந்தங்களைப் பாடியுளர். கிறித்து சமயச் சார்பான பிரபந்தங்களுஞ் சிலவுள. பன்னூற்றுக் கணக்காகவுள்ள



கதிர்காமம்

இப் பிரபந்தங்களிற் சிலவற்றையாகுதல் ஈண்டுக் காண்பாம்.

சின்னத்தம்பிப் புலவர் ஈழநாட்டுப் புலவர்கள் பலராலே போற்றப்பட்டவர். அவர் இயற்றிய நூல்கள் மறசையந்தாதி, கல்வளை அந்தாதி, கரவை வேலன் கோவை, பருளைப்பள்ளு முதலியன. **மயில்வாகனப் புலவர்** புலியூர் யமக அந்தாதியும், **சிற்றம்பலப் புலவர்** கிள்ளைவிடு தூதும் செய்தனர். **வரத பண்டிதர்** செய்த கிள்ளைவிடு தூதும் ஒன்றுண்டு. **சிவானந்தையரும்** ஒரு புலியூரந்தாதி தந்துளர். கதிரைமலைக் குறவஞ்சி, குருக்கள் கோடரி முதலியனவற்றைப் **புலவன் விநாயகர்** இயற்றினர். **சேனாதிராயர்** செய்த நூல்கள் நல்லைவெண்பா, நல்லையந்தாதி முதலியனவாகும்.

இவர் பாடிய நல்லைக் குறவஞ்சியிற் சில பாடல்களே கிடைக்கின்றன. இக்குறவஞ்சிப் பாடல்கள் மிகச் சிறந்தன என்பதைப் பின்வரும் பாடல் நன்கு காட்டுகின்றது.

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை.[1]

நெல்லை வேலவருலாவினைச் **சரவண முத்துப் புலவரும்** திருத்தில்லைப்பல் சந்தமாலையினைக் **கார்த்திகேயப் புலவரும்**, மறைசைக் கலம்பகம், நீர்வை வெண்பா, வல்லிபுரநாதர் பதிகம் முதலிய

---

1. இருவாலைக் குயத்தியர்—வள்ளி தேவநாயகிகள். சட்டி - ஒருதிதி ; குடம் - கும்ப மாதம் - மாசி மாதம். சாறு - விழா.



நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

வற்றைப் பீதாம்பரப் புலவரும் பாடினர். அருளம்பலக்கோவை, நல்லைக் கலித்துறை, கந்த வன நாதரூஞ்சல் முதலியனவற்றைக் குமார சுவாமி முதலியார் இயற்றினர். மயிலணிச் சிலேடை வெண்பா, குடந்தை வெண்பா, நீதி நூறு, பதார்த்த தீபிகை முதலியவற்றின் ஆசிரி யர் முருகேச பண்டிதராவார். வண்ணைக் குற வஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி முதலியவற்றை விசுவநாத சாத்திரிகளும், ஈழமண்டல சத கத்தை வேற்பிள்ளையுஞ் செய்தனர். சபாபதி நாவலர் திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந் தாதி, மாவையந்தாதி, திருச்சிற்றம்பல யமக வந் தாதி முதலியன தந்தார். சிவ்சம்புப் புலவர் கல்லாடக் கலித்துறை, பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை முதலிய அறுபது பிரபந்தங் களைத் தமிழ்த் தாய்க்கு அளித்துளர். காலிக்கதி ரேசர் ஊஞ்சல் முதலிய பல ஊஞ்சல்களை ஏரம் பையர் இயற்றினர். சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் பாடிய ஊஞ்சல்களும், பதிகங்களும் பல வாகும். வேலணை இலந்தைக் காட்டுச் சித்திவிநா யகர் இரட்டை மணி மாலை, வண்ணைச் சிலேடை வெண்பா, கடம்பரந்தாதி முதலியவற்றைப் பேரம் பலப் புலவர் இயற்றினர். மாவை மும்மணி மாலையினையும், நல்லைக் கோவையினையும் செவ் வந்திநாத தேசிகர் செய்தார். அப்புக்குட்டி ஐயர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழினையும், கணபதி ஐயர் வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி யினையும், சின்னத்தம்பி என்பார் வீரபத்திரர் சதகத்தையும் சின்னக்குட்டிப் புலவர் தண்டி கைக் கனகராயன் பள்ளினையும் பாடினார்கள். ஒரு

துறைக்கோவையாகிய அடைக்கலங் கோவையினை ஆக்கிய புலவர் நாகேச ஐயராவர். திருச்செல்வ ராசர் காப்பியத்தைப் பூலோகசிங்க முதலியாரும் கஞ்சன் காவியத்தை முத்துக் குமாரரும், திருச் சதகம், நன்னெறிக் கொத்து முதலியவற்றைச் சதாசிவம் பிள்ளையும், இயேசு பிள்ளைக் கவியினைப் பிரான்சிசுப்பிள்ளையும், மருதப்பக் குறவஞ்சியைப் பிலிப்புதேமெல்லோவும் இயற்றினர்.

நயினாதீவிலுள்ள நாகம்மாள் மேலும் பல பிரபந்தங்கள் பாடப்பட்டுள. நயினை நிரோட்ட யமக அந்தாதியினை நாகமணிப் புலவரும், நாகம்மாள் பதிகத்தை முத்துக்குமாரப் புலவரும் பாடினர். வறுத்தலைவிளான் மயில்வாகனப் புலவர், நகுலேசர் விநோத விசித்திர கவிப்பூங்கொத்து, இணுவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலியனவற்றை இயற்றினர். நவநீத கிருட்டின பாரதியார் உலகியல் விளக்கத்தைச் சங்கச் செய்யுணடையிற் பாடினர். பண்டிதர் நல்லதம்பி மணித் திருநாடும் மரதன் ஓட்டமும் எனும் நூலை யாத்து இலங்கையரசினர் பரிசிலைப் பெற்றார்.

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் இயற்றிய பிரபந்தங்கள் பலவாகும். இலங்கைவளம், தால விலாசம், நாமகள் புகழ்மாலை, சிறுவர் செந்தமிழ், கதிரைச் சிலேடை வெண்பா, மருதன் அஞ்சல் ஓட்டம் முதலியனவாக அவர் பாடிய பைந்தமிழ்ப் பாடல்கள் ஏறக்குறையப் பத்தாயிரம் என்பர்.

ஆடிப்பிறப்புக் கொண்டாட்டத்தை ஒரு சிறுவன் பாடிமகிழ்வதை அழகாகப் பின்வரும் பாடல்களில் அவர் தீட்டிக் காட்டியுளர்.[1]

1. சிறுவர் செந்தமிழ். பக்கம் 11.

" ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டுநல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரையுங் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத்தி ரட்டிக்கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே.

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே.

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே.

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"

தனிப்பாடல்கள்

தமிழ்ப்புலவர்கள் பிரபந்தங்களை மாத்திர மன்றித் தனிப் பாடல்களையும் பாடுவது வழக்கம். தமிழ் நாட்டுப் புலவர்கள் பாடிய தனிப் பாடல் களைச் சேர்த்துத் தனிப்பாடற்றிரட்டுக்கள் சில வற்றை அறிஞர்கள் வெளியிட்டுளர். ஈழநாட்டுப் புலவர்கள் பாடிய தனிப்பாடல்கள் பன்னூற்றுக் கணக்காக உள. இவற்றுள்ளே பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் அரசர்களைப் பற்றிய பாடல்களும் பலவாகும். இவற்றை இதுவரையும் திரட்டி வெளியிடுதற்கு ஒருவரும் முயலவில்லை. இப்பெரும் பணியைச் செய்தற்குத் தமிழ் வளர்க்குஞ் சங்கங்கள் முன்வருதல் வேண்டும்.

இந்த நூற்றுண்டிலே நாம் அதிகமாக உரை நடையிலேயே நம்முடைய கருத்துக்களை வெளியிடு கிரும். சென்ற நூற்றுண்டிலும் அதற்கு முன் னரும் இருந்த புலவர்கள் கடிதங்களையும் செய்தி களையுங் கூடப் பாட்டிலேயே தீட்டினுர்கள்; அன்பர்கள் விரும்பியவுடன் ஆசுகவிகளைப் பாடி னுர்கள்; சித்திரகவிகளையுஞ் செய்தார்கள். சில புலவர்கள் நூல் ஒன்றினையேனும் இயற்ருவிடினும் அருமையான தனிப்பாடல்களைப் பாடித்தந்துளர். இப்பாடல்களிற் பல பரம்பரை பரம்பரையாக வழங்கி வருகின்றன. ஈண்டுச் சில பாடல்களைப் பார்ப்போம்.

பரராசசிங்கனிடம் வந்து பரிசில்பெற்ற அந்தகக்கவி வீரராகவ முதலியார் அவன்மீது ஒரு வண்ணக்கவி பாடினர். அதைக் கேட்ட அரசன் பின்வரும் பாடலைப்பாடினனென்பர்.

" விரகன் முத்தமிழ்க் கவிவீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும வாணனும் ஒப்பத் தோன்றினற்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே."[1]

நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் தம் இளம் பருவத்திலே ஒருநாள் தோழருடன் விளையாடிக் கொண்டு நின்றார். அங்குச் சென்ற புலவர் ஒருவர் அவரை நோக்கி அவர்தம் தந்தையாராகிய வில்லவ ராய முதலியார் வீடுயாதென்று வினவினர்.

" பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்."

என்று விடை கூறினர் சின்னதம்பிப்புலவர்.

வேலணையூர்ப் பேரம்பலப்புலவர் பாட சாலையிற் படிக்குங் காலத்திலே தம்முடைய நண்ப ராகிய சாந்தலிங்கம் பிள்ளையிடமிருந்து ஓர் அகராதியினைப் பெறவிரும்பினர். உடனே,

" சாந்தலிங்க மென்றிச் சகம்பழிச்ச வாழ்வுகூர்
சாந்தலிங்க சோதிடநற் சாகரமே—ஓர்ந்தும்
அகராதி தன்னை யனுப்புஞ் சிலசொற்
றகவாக நானுணரத் தான்"

எனும் வெண்பாவைப் பாடியனுப்பினர்.

விரகன் - மிகவும் வல்லவன்; உரகன் - ஆயிரந்தலையுடைய ஆதிசேடன்; வாணன் - ஆயிரங்கைகளையுடையவன். சிரகர கம்பிதம் - தலையசைத்துக் கைகொட்டல்.

சித்திர கவிகள் பாடுவதிற் சுன்னுகத்து **முத்துக்குமார கவிராசர்** புகழ்படைத்தவர். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்ப்பெயர்களை அமைத்துப் பிரகேளிகைச் செய்யுள்கள்[1] சிலபாடியுளர். அவற்றில் ஒன்றினைப் பாருங்கள்.

" முடிவிலா துறை சுன்னுகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னுலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோரிள வாலையே." [2]

விரோதச் சிலேடையாக **முருகேச பண்டிதர்** பாடியதொரு பாடலையும் படித்து மேற்செல்வோம்.

" நெட்டையிலை வைத்திருக்குஞ் செவ்வே ளல்ல
நெடிதோங்கித் தண்டேந்து மாலு மல்ல
கட்டுவா ருரளிக்கும் பிரம னல்ல
கனி வெட்டி யெடுத்தலாற் சுரங்க மல்ல

---

1. பிரகேளிகை - கருதியபொருளை மறைத்துக் கூறுவது.

2. சுன்னுகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக் கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னுலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பன யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களின் பெயர்கள். தாம் கருதிய பொருளைப் புலவர் இந்தப் பெயர்களிலே மறைத்து வைத்துளர். இதனுல் இச் செய்யுள் நாமாந்தரிதை என்னும் பிரகேளிகையாகும். சுல் + நாகம் = சுன்னுகம். சுல் - வெள்ளி, நாகம் - மலை. வழி - பிள்ளை. தாவு + அடி = தாவடி. கொக்கு - குதிரை. ஆனைக்கோட்டை வெளிகட்டு உடை - மார்பிற் கட்டிய துகில். உடுவிலான் - சந்திரன். ஆலையான் - கரும்பு வில்லை யுடைய மன்மதன். இளவாலை - இளம்பெண். ஆகம் - சரீரம். பலாலி - பலதுளி.

நாட்டவரைத் தனபதியா யிருக்கச் செய்யும்
நன்மையிரு னும்வணங்கு மீசனல்ல
சிட்டரெலாங் கொள்ளுமொரு பொருளே யாருஞ்
செகமறிய விப்பொருளைச் செப்பு வீரே.''[1]

நாவலர் பெருமானுந் தனிப்பாடல்கள் சில பாடியுளர். இந்த நூற்றுண்டில் நம்மை விட்டுப் பிரிந்த புலவர் பெருமக்களாகிய தாமோதரம் பிள்ளையும், சுன்னைக் குமாரசுவாமிப் புலவரும், சிற்கைலாச பிள்ளையும், மகாலிங்க சிவமும், சோம சுந்தரப் புலவரும் பாடிய தனிப் பாடல்களும் பலவுள.

விபுலானந்த அடிகளார் பாடிய பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதற்கு அன்பர்கள் சிலர் முயல்கின்றனர். படிக்கப் படிக்க இன்பம் நல்கும் அவர்களுடைய பாடல்களுள்ளே காவிய மணமுந் தெய்வ மணமுஞ் சேர்ந்து கமழும் மூன்று பாடல் களை ஈண்டுக் குறிப்பிடாமல் மேலே செல்லுதல் சாலாது. படித்தவர்களையும், படிக்காதவர்களையும் இழுத்து இழுத்து இன்புறுத்தும் இப்பாடல்கள் "ஈசனுவக்கும் இன்மலர்கள் மூன்று" எனும் பெயரையுடையன.

"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்தமா மலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மாமலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனூர் வேண்டுவது.

காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர்மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?

---

1. இப்பாட்டிற் குறிக்கப்பட்ட பொருள் வாழை.
நெட்டையிலை - நெடியவேலை. வான்ஆர் - ஆகாயம், பூமி. கனி - சுரங்கப்பொருள். நட்டவர் - நண்பர்.

காப்பவிழ்ந்த மலருமல்லக் கமுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனுர் வேண்டுவது.

பாட்டாளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்
வாட்டமு ருதவர்க்கு வாய்த்த மலரெதுவோ? [பகமோ
பாட்டளிசேர் கொன்றையல்லப் பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனுர் வேண்டுவது.''

நாடகங்கள்

இந்நூற்றுண்டிலே தென்னிந்தியத் தமிழறிஞர்கள் பலர் நாடக நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுளர். எனினும் சென்ற நூற்றுண்டிலும் அதற்கு முந்திய நூற்றுண்டிலும் ஈழநாட்டுப் புலவர்களே நாடக நூல்கள் இயற்றுவதிலே முன்னணியில் நின்றுளர். நாவலர் பெருமானுடைய தந்தையாராகிய **கந்தப் பிள்ளை** இருபது நாடகங்களுக்கு மேல் எழுதியுளர். அவர் இறக்கும்பொழுதும் இரத்தினவல்லி விலாசம் எனும் நாடகத்தை எழுதிக்கொண்டிருந்தார். அவர் இறந்த பின்னர், இந்த நாடகத்தை நாவலர் பெருமான் எழுதி முடித்தார். கந்தப்பிள்ளை எழுதிய நாடகங்களிற் சந்திரகாச நாடகம், இராம விலாசம், கண்டி நாடகம், ஏரோது நாடகம், முதலியன குறிப்பிடத் தக்கன. பின்வரும் விருத்தம் இரத்தினவல்லி விலாசத்திலுள்ளது; 1842ஆம் ஆண்டில் அவராற் பாடப்பட்டது.

'' திருவளர் வனஞ்சூ ழயோத்தியம் பதியிற்
றசரத னருள்பெறு ராமன்
றகுகவு சிகற்காய்த் தம்பிலட் சுமணன்
றன்னெடுந் தனிவனம் புகுந்து
செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்
சிதைத்துயா கமுநிறை வேற்றித்

திகழுக லிகைதன் சிலையுரு வகற்றிச்
சீதையைக் கண்டுவின் முரித்து
மருவளர் மிதிலை மணம்புரிந் தேதம்
வளர்நகர்க் கேகுமவ் வழியில்
வரும்பர சிராமன் வலியொடும் வில்லு
வாங்கியே சென்றுவாழ்ந் திருந்த
திருவளர் கதையை விலாசம தாகச்
செப்பினேன் பிழையிருந் தாலும்
செந்தமிழ்ப் புலவி ரவைபொறுத் தருள்வீர்
தேவசா ரித்திர மெனவே ".

இராம நாடகம், தருமபுத்திர நாடகம் என்பன வற்றைச் சுவாமிநாதரும், இந்திரகுமார நாடகத் தைப் புலோலிக் கணபதிப் பிள்ளையும் எழுதினர். இராமலிங்க பிள்ளை மாணிக்கவாசக விலாசம், நளச்சக்கரவர்த்தி விலாசம் என்பனவற்றை ஆக்கினுர். அபிமன்யு நாடகம், அலங்கார ரூபன் நாடகம், அதிரூபவதி நாடகம், மலையகந்தினி நாடகம் என்பனவற்றின் ஆசிரியர் கணபதி ஐயராவார். முத்துக் குமாரப் புலவர் பதுமாபதி நாடகம், தேவசகாய நாடகம், சீமந்தனி நாடகம் எனும் மூன்றினைத் தந்தார். அருச்சுன நாடகம், சுபத்திரை நாடகம் என்பன நாகேசையராலும் குருக்கேத்திர நாடகம் முருகேசையராலும், சோமகேசரி நாடகம், பரிமளகாச நாடகம் என்பன மாப்பாண முதலியாராலும் எழுதப்பட்டன. இணுவிற் சின்னத்தம்பி, நொண்டி நாடகம், அனிருத்த நாடகம், கோவலன் நாடகம் என்பன வற்றையும், உடுப்பிட்டுச் சின்னத் தம்பி, மதன வல்லி விலாசம், இராமவிலாசம் என்பனவற்றை யும் இயற்றினர். பதிவிரதை விலாச ஆசிரியர் குமரகுல சிங்க முதலியாராவார். சோமசுந்தரப்

புலவர் உயிரிளங் குமரன் எனும் அரியதொரு நாடகத்தை எழுதினர்.

இசைப் பாடல்கள்

"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று பாடினர் திருநாவுக்கரசர். இவர் வழி வந்த தமிழ் நாட்டு மக்கள் சென்ற சில நூற்றாண்டுகளிலே தெலுங்கோடிசை பாடினர்கள். இந் நூற்றாண்டிலும் அவ்வழக்கம் இன்னும் அற்றுப் போகவில்லை. தமிழிசைப் பாடல்களையே தமிழ்க் கலைஞர்கள் பாட வேண்டுமெனுங் கொள்கை சென்ற சில ஆண்டுகளாகத் தான் நிலைபெறத் தொடங்கியுளது. இப்பொழுது பல அறிஞர்கள் தமிழிசைப் பாடல்களைப் பாடித் தமிழிசையினை வளர்க்கிறார்கள். இந்தத் துறையில் ஈழநாட்டுப் புலவர்களும் தொண்டாற்றியுளர். பதினேழாம் நூற்றாண்டிறுதியிலும், பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலுமிருந்த புலவர்கள் பலர் பதங்களுங் கீர்த்தனங்களும் பாடியுளர். முன்னர்க் குறிப்பிட்ட நாடக நூல்களிலும் இசைப் பாடல்கள் பலஉள. நாவலர் பெருமானுஞ் சில கீர்த்தனங்களைப் பாடித் தமிழிசை இயக்கத்திற்கு விதை இட்டார். இக் கீர்த்தனங்கள் கதிரை யாத்திரை விளக்கத்திற் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றினைப் படித்துப் பார்ப்போம்.

இராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

நிருமல பரசிவ சண்முகா—சுத்த
நித்திய—சத்திய—வித்தக ஞுங்குக. (நிரு)

அனுபல்லவி

திருவு லாவு மிலங்கையின் மேவிய
சீர்திக ழுங்கதிர் காமத் துறைதரு
சிற்பரா—அருள்தற்பரா—அன்பர்
சிந்தை யுகந்தம ருந்தனி வேலவனே. (நிரு)

சரணம்

அறிவுக் கறிவாய் நின்றவா—கிரௌஞ்சகிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
கூரந் துளாயணி மருமன் மருகா
கோலனே—புரிநூலனே—ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள். (நிரு)

கதிரை யாத்திரை விளக்கத்தில் நாவலருடைய தமையனுர் பரமானந்தர் பாடிய இருபதுக்கு மேற் பட்ட கீர்த்தனங்களுமுள. கதிரை யாத்திரை விளக்கமும் நொண்டிச் சிந்தாகவே பாடப் பட்டுளது. ஆவரங்கால் நமச்சிவாயப் புலவரும் பல கீர்த்தனங்களை இயற்றிப் புகழ் பெற்ருர். இராமசாமி ஐயருடைய கீர்த்தனங்களும் போற் றப்படத் தக்கன. அனந்த சுப்பையரும் சில பதங்களுங் கீர்த்தனங்களும் பாடியுளர். குமார சிங்க முதலியார், குமாரகுலசிங்க முதலியார், என்பவர்கள் கிறித்தவக் கீதங்கள் பாடி யிசையீட் டினர். பிரான்சிக்குப் பிள்ளை கீர்த்தனத்திரட்டு என்பதொரு நூலும் இயற்றியுளர்.

உரைகள்

சிறந்த இலக்கிய நூல்களுக்கும், இலக்கண நூல்களுக்கும் உரை எழுதுவதும் சிறந்த தமிழ்த் தொண்டாகும். இடைக்காலத்திலே உரையாசிரி யர்கள் பலர் தமிழ் நாட்டிலே இத்தொண்டினைச் செய்து புகழ்பெற்றனர். இத்துறையிலே ஈழ

நாட்டுப் புலவர்கள் சிலரும் உழைத்துயர்ந்துளர். செய்யுணூல்களைத் தமிழ் மக்கள் இலகுவிற் கற்றுப் பயனடைய வேண்டுமெனும் நோக்கத்துடனும் நாவலர் பெருமான் நற்றொண்டாற்றியவராதலின்



வித்துவ சிரோமணி பொன்னம்பலப் பிள்ளை

அவர் பல நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். கோயிற்புராணம், சைவ சமயநெறி, நன்னூல், திருமுருகாற்றுப்படை திருச்செந்திநிரோட்டய மக அந்தாதி, சிவதருமோத்தரம் முதலிய நூல்கள் அவர்தம் உரை பெற்றுச் சிறப்படைந்தனவுட் சிலவாகும். நாவலர்தம் மருகராகிய

பொன்னம்பலப் பிள்ளை மிகச் சிறந்த உரையாசிரியர்; வித்துவசிரோமணி எனப் பாராட்டப்பட்டவர். சொற்களுக்கு நுட்பமாகப் பொருள் கூறுவதில் இவருக்கு இணையானவர்களை இக்காலத்திலே காணல் முடியாது. இவர் வில்லிபுத்தூரர் பாரதத்திற் சில பருவங்களுக்கும், மயூரகிரிப் புராணத்துக்கும் எழுதிய உரைகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. பாரதத்திலுள்ள ஒரு பாட்டுக்குச் சொற் பொருணயந்தோன்ற இவர் எழுதிய உரையினைப் படித்து மேற்செல்வோம்.

"முருகார் மலர்த்தாம முடியோனை
அடியார் முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கும் மதயானை
வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து
முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவருங் கைதொழுங்
கோவையுற வுன்னுவாம்."

(இ - ள்.) முருகு ஆர் தாம மலர் முடியோனை - வாசனை நிறைந்த கொன்றைப் பூவையணியுஞ் சடைமுடியை உடையவரை, அடியார் முயற்சித் திறம் திருகாமல் விளைவிக்கும் மதயானை வதனச் செழுங்குன்றினை - அன்பர்களாகிய உழவர்களுடைய முயற்சியின் பகுதிகளாகிய பயிர்களை மாறுபடாமல் விளையச் செய்யும் மதமாகிய அருவியைச் சொரியும் யானைமுகத்தினையுடைய செழுமையாகிய மலையை; புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும் - இந்திரனை முதல்வனாகக் கொண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும்; ஒரு கோடி பூதேவரும் கைதொழும் கோவை - ஒரு கோடி பிராமணரும் வணங்கும் விநாயக் கடவுளை; உற உன்னுவாம் - (யாம்) மிகவும் தியானிப்பாம். எ - று.

'எனவே, அன்பனாகிய எனக்கும் இந்நூல் செய்தற் கணிகழும் முயற்சியை இடையூறின்றி இனிது முடிப்பர்

என்பது கருத்து. முயற்சிகள் பலவாதல் பற்றி முயற்சித்திறம் எனவும், தன்னை யடைந்தோர்க்குப் பலவளங்களையும் எளிதிற் கொடுக்கும் மலை என்பது போதரச் செழுங்குன்றெனவுங் கூறினர். இங்கே ஒரு கோடி என்றது வரையறுத்தோ ரெண்ணை யுணர்த்தாது எண்ணின் மிகுதியை உணர்த்தி நின்றது. "உருத்திரர் வசுக்கதிர் மருத்துவரெனப் பொலியு முப்பத்து முக்கோடி தேவர்கள்" என முப்பத்து முக்கோடி தேவர்களின் வகை கூறுதலின் இந்திரன் அவருள் அடங்காமைபற்றிப் புருகூதன் முதலாய என்பதற்கு இந்திரனை முதல்வனுகக் கொண்ட எனப்பொருளுரைக் கப்பட்டது. அடியார் முயற்சித்திறந்திருகாமல் விளை விக்கும் மதயானை வதனச் செழுங்குன்றினை என்பது குறிப்பு ரூபகம் என்னும் அலங்காரம். உற, உரியடி யாகப் பிறந்த வினையெச்சம்.

சொற்களின் தோற்றங்களையும் சொற்பொருள் களையும் நுட்பமாக உணர்த்துவதிற்றமிழகம் முழுதும் புகழ்பெற்று விளங்கிய **சுன்னைக் குமார சுவாமிப் புலவர்** அரிதினுணர்தற்பாலவாகிய தனிப் பாடல்கள் பலவற்றுக்கு உரைகண்டுளர். கலைசைச் சிலேடை வெண்பாவுக்கு இவர் எழுதிய உரையே முதலுரையாகும். இவற்றுடன் இவர் சூடாமணி நிகண்டின் முதலிரண்டு தொகுதி களுக்குச் சொற்பொருளும், நீதிநெறி விளக்கத் துக்கு ஒரு புத்துரையும் எழுதினர். சிவஞான சித்தியாருக்கு **ஞானப்பிரகாசர்** எழுதிய உரை யினை யாவரும் அறிவர். சிவப்பிரகாசத்துக்குத் **திருவிளங்கம்** எழுதிய உரை அறிஞர்களாற் போற்றப்பட்டுளது.

தமிழகத்தில் இளம்பூரணர் உரையாசிரியர் என்று போற்றப்பட்டதுபோல, இலங்கையிலே

உரையாசிரியர் என்று போற்றப்பட்டவர் **ம. க. வேற்பிள்ளையாவர்.** இவர் திருவாதவூரடிகள் புராணம், அபிராமி அந்தாதி, புலியூரந்தாதி முதலியவற்றிற்கு உரை எழுதினர். **நா. கதிரைவேற்பிள்ளை** கூர்ம புராணத்துக்கு ஒரு விரிவுரையும், பழனித்தல புராணத்துக்கு ஒருரையும் வரைந்துளர். கந்தபுராணத்து அண்டகோசப் படலம், தெய்வயானை திருமணப்படலம், வள்ளியம்மை திருமணப்படலம் முதலியவற்றுக்கும் கல்வளை அந்தாதி, கந்தரலங்காரம் முதலியவற்றுக்கும் **வல்வை வைத்தியலிங்கம்** உரை எழுதியுளர். இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு வந்து தமிழ் வளர்த்த **கூழங்கைத் தம்பிரான்** நன்னூலுக்கு ஒருரை இயற்றியுளர். **நவநீத கிருட்டின பாரதியார்** எழுதி வெளியிட்ட திருவாசக ஆராய்ச்சிப் பேருரை அறிஞர்கள் பலராற் பாராட்டப்பட்டுளது.

இலக்கண நூல்கள்

ஈழநாட்டுப் புலவர்கள் பல இலக்கண நூல்களைத் திருத்திப் பதித்தும், உரை இயற்றியும் பணிபுரிந்தது மாத்திரமன்றிச் சில இலக்கண நூல்களையும் புதுமுறையில் ஆக்கித்தந்துளர். **நாவலருடைய** இலக்கண வினு விடையினையும், இலக்கணச் சுருக்கத்தையும் யாவரும் அறிவர். தமிழ் வியாகரணம் எனும் நூலை **நெவின்சு சிதம்பரப் பிள்ளை** எழுதினர். **சவுந்தரநாயகம் பிள்ளை** மாணவர் கற்பதற்கு இலகுவாக நன்னூற் சுருக்கந் தந்தார். **மெல்லோப் பாதிரியார்** உவமான விளக்கம் இயற்றினர். நன்னூற் கருப்பையினை ஆக்கியவர் **சரவணமுத்துப் புலவர்.** இலக்கணச்

சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் என்பன **சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்** தமிழ் நாட்டுக் களித்த அரிய நூல்கள். **முத்துத்தம்பிப் பிள்ளை** அவர்கள் செய்த நன்னூல் உதாரண விளக்கமுங் குறிப்பிடத்தக்கது.

உரைநடை நூல்கள்

தமிழ் "உரைநடையின் தந்தை" எனவும், "வசனநடை கைவந்த வல்லாளர்" எனவும் தமிழறிஞர்களாற் போற்றப்பட்டவர் நாவலர் **பெருமானுவார்**. இவரைத் தந்த பெருமை ஈழ நாட்டுக்குரியது. நாவலர் எழுதிய உரைநடை நூல்கள் பலவாகும். பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பர மான்மியம் முதலியன குறிப்பிடத்தக்கன. பாலர்கள் பயிலுவதற்கும் சிறந்த பாடநூல்களை முதன் முதல் இயற்றியவரும் நாவலரே ஆவர். அவருடைய பால பாடங்கள் 1872ஆம் ஆண்டு வெளிவந்தன. யாவரும் இலகுவில் படித்துணரத்தக்க வினு விடை வடிவத்திலும் நாவலர் சில நூல்களை இயற்றியுளர். இலக்கண வினுவிடை, சைவ வினு விடை முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவை. சைவ சமயச் சார்பாக நாவலர் எழுதிய உரைநடை நூல்களும் பலவாகும். கிறித்தவர்களுடைய விவிலிய நூலையும் நாவலர் மொழிபெயர்த்து உரைநடையிற் றந்தார்.

நாவலருக்கு முன்னர்—பதினெட்டாம் நூற்ருண்டிலே வீரமாமுனிவர் எழுதிய உரைநடை நூல்களுக்குப் பின்—ஈழநாட்டிலே ஒரு சிறந்த உரைநடை நூல் தோன்றிற்று. **மயில்வாகனப்**

புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையே அந்நூலாகும். அக்காலத்திலே பிலிப்பு தேமெல்லோ என்பவரும் புதிய ஏற்பாட்டைத் தமிழிலாக்கிப் பதிப்பித்தார். நாகநாத பண்டிதர் எழுதிய இதோபதேசமும், தாமோதரம் பிள்ளை எழுதிய சூளாமணி வசனமும், முத்துத்தம்பிப் பிள்ளை எழுதிய பாரதச் சுருக்கமும் குறிப்பிடத் தக்கன. கனகசுந்தரம் பிள்ளை இல்லாண்மை எனும் ஒரு நூலை எழுதியுளர். சுன்னைக் குமார சுவாமிப் புலவர் சிசுபால சரிதம், இரகுவமிச சரிதாமிர்தம் முதலிய உரைநடை நூல்களை எழுதியுளர். கிறித்த சமய நூல்களாகவும் மொழி பெயர்ப்புக்களாகவும் பல் உரைநடை நூல்கள் தோன்றியுள்ளன. நன்னெறி கதா சங்கிரகம் எனும் நூல் சதாசிவம் பிள்ளையால் எழுதப் பட்டது.

ஐரோப்பிய மொழிகளின் தொடர்பால் தமிழிலும் நவீனம் எனும் புது இலக்கியவகை தோன்றிற்று. இக்காலத்திலே நவீனங்களைப் பலர் எழுதுகிறார்கள். இவற்றுள்ளே பிழை மலிந்தன பலவாகும். பிழைகளின்றிச் சிறந்த நவீனங்களைத் தொடக்கத்திலே எழுதிய அறிஞர்களை விரல்விட்டெண்ணலாம். இவர்களுள்ளே யாழ்ப் பாணத்தறிஞர் சரவண பிள்ளையும் ஒருவராவார். இவர் எழுதிய நூல் மோகனாங்கி என்பது.

மயில்வாகனப் புலவர் 18ஆம் நூற்றாண்டில்[1] எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையில் உள்ள ஒரு

1. யாழ்ப்பாண வைபவ மாலையிலுள்ள சான்றினால் இது கி. பி. 1790 அளவில் எழுதப்பட்டது எனலாம். யா. வை. மாலை ப. 3.

பகுதியைக்[1] கீழே காண்க. அக்காலத்தில் யாழ்ப் பாணத்திலே எழுதப்பட்ட தமிழ் உரை நடை எவ்வாறிருந்த தென்பதை இது காட்டுகிறது.

> "பாண்டுமகாராசன் இந்த முகாந்திரத்தி ஞல் இவ்விடமிருக்க, அவன் மனைவி குளக் கோட்ட மகாராசன் கோணேசர் கோவிற் றிருப்பணி நிறைவேற்றுஞ் செய்தியைக் கேள் விப்பட்டுக் கண்டியிலிருந்த சில சேனைகளை, 'நீங்கள்போய் அந்தக் குளக்கோட்டனை இந் நாட்டினின்று துரத்திவிட்டு வாருங்கள்' என்றனுப்பிவிட்டாள். அந்தச் சேனைகள் தம்பலகாமத்திற் போய் அவ்விடத்திற் குளக் கோட்டரசன் நிறைவேற்றும் பெரிய வேலை களையும் அவனுடன் நின்ற சேனைத்திரளையும் கண்டு பயந்து நடுநடுங்கின. அரசன் அச் சேனுவீரர்களை நோக்கி "ஏன் வந்தீர்கள்"? என்ன அவர்கள் "மகாராசனே, இந்தத் திருப்பணிக்கு வேண்டிய பொருள் யாதேனும் தேவையென்ருல் விசாரித்துக் கொடுத்துவிட்டு வாருங்கள், என்று எங்கள் அரசி அனுப்ப வந்தோம்", என்ருர்கள். அப்பொழுது மகா ராசன் அவர்களை நோக்கி, "வேண்டிய சகல வஸ்துக்களும் என்னிடத்தில் சம்பூரணமாய் இருக்கின்றன; யாதொன்றும வேண்டிய தில்லை. உங்கள் சேமாதிசயங்களை விசாரித் தேன் என்று உங்கள் இராணிக்கு அறிவியுங் கள்," என்று சொல்லி அச்சேனை முழுவதற் கும் உச்சிதமான விருந்து கொடுத்து அனுப்

---

1. யாழ்ப்பாண வைபவமாலை ப. 10, 11.

பினுன். அவர்கள் திரும்பிப்போய் அவ்விடத்திலே நடந்த செய்தி அனைத்தையும் அறிவித்துத் தாங்களுண்ட விருந்திற் பரிமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து பேசினுர்கள். இராசாத்தி அந்தச் செய்தியைக் கேட்டு யாதொரு பேச்சுமின்றி இருந்தாள்.

குளக்கோட்டு மகாராசன் திருப்பணியை நிறைவேற்றி அவ்வாலயப் பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும், கோணேசலிங்கத்துக்குப் பூசனை புரிவிப்பதற்கும் செலவு வரவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையுந் தோப்புக்களையும் ஏற்படுத்தி, அவைகளிற் பயிரிட்டு வருமானஞ் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான்.''

கட்டுரைகள்

ஈழ நாட்டிலே தோன்றிய பல பத்திரிகைகள் ஈழநாட்டுப் புலவர்களின் கட்டுரை எழுதும் ஆற்றலை நன்கு விளக்கும். தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கும் அவர்கள் பல கட்டுரைகளை வழங்கியுளர். மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' தொடங்கிய காலத்தில் குமாரசுவாமிப் புலவர், முத்துத்தம்பிப்பிள்ளை, செந்திநாதையர் முதலியோர் எழுதி உதவிய கட்டுரைகள் அதனை அணி பெறச் செய்தன. விபுலானந்த அடிகளாரின் கட்டுரைகளைப் பெற்றிலங்காத பத்திரிகைகள் இல்லை என்பதை இக்காலத்தவர் யாவருமறிவர்.

கண்டனங்கள்

நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் தங்கள் உரைகளிலே பிறருடைய கருத்துக்களை மறுத்தெழுதுவது மரபு. பதினெட்டாம் நூற்றாண்டிலே சிவஞான முனிவர் மறுப்புரைகள் பல எழுதினார். அவர்தம் இலக்கண விளக்கச் சூறாவளியினை யாவரும் அறிவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற் கண்டனங்கள் எழுதுவதில் ஈழநாட்டுப் புலவர்களே சிறந்து விளங்கினர். நாவலருடைய கண்டனங்கள் தனிச்சிறப்புடையன; எதிரிகளாலே இலகுவில் அசைக்கமுடியாதன. சைவதூஷண பரிகாரம், இதனை மறுத்து விசுவநாதபிள்ளை எழுதிய சுப்பிரதீபத்துக்கு மறுப்பாக எழுந்த ‘சுப்பிரபோதம்’, ‘மித்தியாவாத நிரசனம்’ ‘போலி அருட்பா மறுப்பு’ முதலியன நாவலர் எழுதிய கண்டனங்களுட் சிறந்தன. நாவலரைப் பின்பற்றிப் பலர் கண்டனங்களை எழுதியுளர்.

கிறித்தவர்களும், சைவர்களும் முரண்பட்டு எழுதிய நூல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோன்றின. முத்துக்குமார கவிராயர் பாடிய “ஞானக் கும்மி”க்கு மறுப்பாக “அஞ்ஞானக்கும்மி” தோன்றிற்று. இதனை மறுத்துச் சிலம்புநாத பிள்ளை என்பார் ‘அஞ்ஞானக் கும்மி மறுப்பை’ எழுதினார். அருளப்ப முதலியார் எழுதிய ‘அலங்கார பஞ்சக’த்துக்கு மறுப்பாயெழுந்த நூல் முருகேச பண்டிதர் பாடிய ‘அலங்கார பஞ்சக சண்டமாருத’மாகும். இதிலுள்ள ஒரு செய்யுளைப் பாருங்கள்.

" அரும்பிரா மணத்தினிய கனியுதவு
மருங்கொடி பருதியம் பரத்தி
இருந்தரா சாத்தி கழுமொரு நீதி
யிறைமகள் இணையறு மறத்தி
பொருந்தவெஞ் ஞான்று ஞானசக்கிலிச்சி
புல்லனை யருள்கநன் குறத்தி
மருந்தெனப் புகழு மருத மடுவினில்
வதிசெப மாலைமா மரியே[1]".

தாமோதரம் பிள்ளை எழுதிய சைவமகத்துவம் எனும் நூலுக்கு அருளப்ப முதலியார் 'சைவ மகத்துவதிக்காரம்' என்றொரு கண்டனம் விடுத்தார். இதனைக் கண்டித்து, **வல்வை வைத்தியலிங்கம்** "சைவமகத்துவதிக்கார நிக்கிரகம்" என்பதை வெளியிட்டார். 'கிறித்து மதக் கண்டனம்', 'சிவதூஷண கண்டனம்' என்பன **சங்கர பண்டிதரால்** எழுதப்பட்டவை. 'அருட்பா அன்று மருட்பா' என்பதன் ஆசிரியர் **நா. கதிரைவேற் பிள்ளையாவார்**. 'வைதிக காவிய தூஷண

1. இதன் பொருளைப் பின்வருமாறு சுன்னைக் குமார சுவாமிப் புலவர் விளக்கியுளர்: அருங்கொடி இருந்தராசு என்னுந் தொடர்களை அரும் - கொடி, இரும் - தராசு எனப் பிரித்தது ஏன்? இவற்றிற்கு மை இறுதியாவதன்றி "இன மிகல்" என்பதனுற் ரோற்றிய மகரவொற்றும் இறுதியாகுமா? மணத்தினிய கனி என்பதற்கு வாசனையைக் கொண்ட இன்பமாகிய கனி என்றுரைத்தவர் மணத்து இனிய எனப் பதம் பிரித்தது என்னை? மணத்து என்னும் வினையெச்சம் வாசனையைக் கொண்ட என்னும் பெயரெச்சப் பொருளைத் தருமா? இனிய என்பதற்கு இன்பமாகியது எனப் பொருளுரைத்தது என்னை? இனிமைக்கு இன்பம் பிரதி பதமாகுமா? சக்கிலிச்சி என்பதில் இச்சி என்பதற்கு விரும்பி எனப் பொருளுரைக்க ஆன்றோர் வழக்கும் உண்டா?

மறுப்பினையும் 'யேசுமத சங்கற்ப நிராகரணத்தையும்' ஆக்கியவர் சபாபதி நாவலர்.

காசிவாசி செந்திநாதையரும் பல கண்டன நூல்கள் எழுதினர். தேவ கோட்டையூர்ச் சந்நியாசியார் ஒருவர் 'ஆதி சைவ நாமகுலீன: முகபங்க முத்திர[1]' 'தாந்திரிகதுண்ட கண்டனம்' எனுமிரு நூல்களை வெளியிட்டார். இவற்றுக்கு மறுப்பாகச் செந்திநாதையர் முறையே "வச்சிரதண்டம்", 'தாந்திரிக துண்ட கண்டன கண்டனம்' என்பவற்றை எழுதினர். சாமுவேல் சற்குணர் எழுதிய 'சாணாரெல்லாஞ் க்ஷத்திரியர்' என்பதன் மறுப்பாகச் செந்திநாதையர் எழுதிய நூல் 'சாண்க்ஷத்திரியப் பிரசண்ட மாருத'மாகும். 'சிவனுந் தேவனு' என்பதனை மறுத்து 'அவர் 'சிவனுந்தேவனு எனும் தீய நாவுக்கு ஆப்பு' என்றொரு கண்டனம் எழுதினர்; 'விவிலிய குற்சிதம்' என்பது நாவலர்தம் கண்டன நூல். இதனை மறுத்துக் கிறித்தவர்கள் ஒரு கண்டனம் வெளியிட்டனர். இக்கண்டனத்துக்குத் தலையடி கொடுக்க 'விவிலிய குற்சித கண்டன திக்காரம்' எழுந்தது. இஃதன்றி 'வீரபத்திராஸ்திரம்' 'ஞானபோத விளக்கச் சூருவளி' முதலியனவும் செந்திநாதையர் எழுதிய கண்டன நூல்களாம்.

நாவலர் பெருமானுடைய கண்டன நடையைப் பின்பற்றியே அக்காலத்தவர் பலர் தம்முடைய கண்டனங்களை எழுதியுளராகையால் அக்காலக் கண்டனங்களின் நடையைக் காட்டுதற்கு "மித்தியாவாத நிரசனம்" எனும் பெய

1. ஆதி சைவ குலத்துதித்தவரது முகத்தைத் தகர்க்குங் கோல் என்பது இத்தொடரின் கருத்து.

ருடன் நாவலர் எழுதி வெளியிட்ட கண்டனத்தில் ஒரு பகுதி கீழே கொடுக்கப்படுகிறது.

"சைவப்பிரசாரகர் தமது சுற்றத்தார்களை முன்னர்த் திருத்தியன்றோ பின்னர்ப் பரார்த்த காரியங்களிற் றலையிட வேண்டும் என்றாய். சைவப்பிரசாரகர் தமது சுற்றத்தார்களுட் சிலர் தமது போதனைக்கு அமைந்து நடவாமையினாலே தாம் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாயாயின், ஒரு வைத்தியர் தமது சுற்றத்தாருட் சிலர் தாங்கொடுக்கும் மருந்தை உட்கொண்டு வியாதியைப் போக்கிக் கொள்ளாமையினாலே தாம் பிறருக்கு வைத்தியம் செய்யலாகாது என்பாய்போலும்! ஓர் உபாத்தியாயர் தமது சுற்றத்துப் பிள்ளைகள் சிலர் தமக்கமைந்து கல்வி கற்றுக் கொள்ளாமையினாலே, தாம் பிற பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கலாகாது என்பாய் போலும்! ஒரு சமய போதகர் தமது சுற்றத்தாருட் சிலர் நிரீச்சுரவாதிகளாய் இருத்தலினாலே, தாந் தமது சமயத்தைப் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாய் போலும்! இராசாவுடைய கட்டளையைப் பிரசித்தி செய்வானொருவன், தம் சுற்றத்தாருட் சிலர் அக்கட்டளைக்கு அமையாமையினாலே தாம் அக்கட்டளையைப் பிறருக்குப் பிரசித்தி செய்யலாகாது என்பாய் போலும்! நல்லது. தமது சுற்றத்தாரைத் திருத்த இயலாத சைவப் பிரசாரகரைத்தான் உன் சிநேகிதன் தன்னையுந் தன் கோயிலையுந் தன் கோயிற் கிரியைகளையுந் தன் கோயிற் பிராமணர்களையுந் திருத்தல் வேண்டுமென்று,

பலதரம் அடுத்துப் பிரார்த்தித்து, அழைத்துக் கொண்டுபோய், உபசரிக்க, நீ தடுக்காது பார்த்துக் கொண்டிருந்ததேனே! வெகு சனங் கூடிய திருப்பணிச் சபையிலே, சைவப் பிர சாரகர் மறுக்க, மறுக்க நீ எதிர்நின்று "நீங் கள் எங்களைக் கண்டித்துத் திருத்தும் பொருட்டு இச்சபைக்கு அக்கிராசனுதிபதி யாய் இருத்தல் வேண்டும்" என்று திரும் பத் திரும்ப உச்ச சுரத்தோடு பிரார்த் தித்து, உடன்படுத்தியதேனே? எந்தக் கற் பத்திலே, எந்த மனுவந்தரத்திலே, எந்த யுகத்திலே, இனி எந்தக் கண்டத்திலே, எந்தத் தேசத்திலே, எந்த ஊரிலே, இனி எந்தச் சாதியிலே, எந்தக் குலத்திலே, எந்தக் குடும்பத்திலே எல்லாரும் யோக்கியர்! சற்றே வாய் திற. ஒரு குடும்பத்திலே ஒருவருடைய அயோக்கியதைபற்றி மற்றவரையும் அயோக் கியர் என்று இகழத் தலைப்பட்டால், யோக்கி யர் எனப்படுவார் யாரோ? சற்றே பேசு. இராப்பகல் ஓயாது தாசிவீடு திரிகிறவர்க ளுள்ளே, தாசிக்குத் தம் பொருளைக் கொடுப்பவர் 'அதிபாதகர்' ஆம்; கோவிற் பொருளைக் கவர்ந்து கொடுப்பவன் "புண் ணிய சீலன்" ஆம். இப்பேதங் கண்டுபிடித்து எழுதுவிக்க "மகாத்மி" ஆகிய நீயன்றி வல்லவர் யார்?"

மகாமகோபாத்தியாய

சொற்பொழிவுகள்

சென்னை - 600090

மேடைப் பேச்சு இப்பொழுது ஒரு கலையாக விளங்குகிறது. தமிழ் நாட்டிலே சிறந்த பேச்சா

ளர்கள் பலர் இக்காலத்தில் இருக்கின்றனர். சென்ற நூற்ருண்டின் தொடகத்திலே சொற்பொழிவாற்றத் தக்கவர்கள் மிகச் சிலரே. அக்காலப் புலவர்கள் பலர் உரைநடை எழுதுதலிலும் சொற்பொழிவாற்றுதலிலும் நன்கு பயிலாதிருந்தனர். பாதிரிமார்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்கு மேடைப் பேச்சைப் பயன்படுத்தினர். அந்த முறையிலே, சைவசமய உண்மைகளை எடுத்து விளக்குவாரின்றி ஈழ நாட்டார் இடர்ப்பட்டனர். இந்தச் சமயத்திலே நாவலர் பெருமான் தோன்றினர். 1847ஆம் ஆண்டிலே தமது முதற் சொற்பொழிவைச் செய்தார்; பின்னர்த் தமிழ் நாட்டிலே தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் 'சபாப் பிரசங்க சிங்கமாக' விளங்கினர். அவருடைய நாவன்மையைப் புகழாதவர் இல்லை. அவர் பல சபைகளை நிறுவிப் பலரை அச்சமின்றிப் பேசப் பழக்கினர். அவரைப் பின்பற்றியும் பலர் சிறந்த பேச்சாளர்களாயினர்.

ஈழநாட்டுப் புலவர்கள் சிலர் தென்னிந்தியாவிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றியுளர். இவர்களுள் நா. கதிரைவேற் பிள்ளை, சபாபதி நாவலர், சுவாமிநாத பண்டிதர், சரவண முத்துப்பிள்ளை, செந்திநாதையர், அம்பலவாண நாவலர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். சொற்பொழிவுகளை மாத்திரமன்றி, சேர். பொன். இராமநாதன், சபாரத்தின முதலியார், சேர். கனகசபை, தா. பொன்னம்பல பிள்ளை முதலானோர் பல சபைகளிலே தலைமை தாங்கிப் பேருரைகளையும் நிகழ்த்தியுளர். விபுலானந்த அடிகள் தலைமை தாங்கிச் சிறப்பிக்

காத தமிழ்ச் சங்கங்கள் தமிழ் நாட்டில் இல்லை எனலாம்.

புராணபடனம் முதலியன

சென்ற சில நூற்றாண்டுகளிலே புராணங்கள், இராமாயணம், பாரதம் முதலியவற்றைப் படித்தலும், இவற்றிலுள்ள பாடல்களுக்கு உரை சொல்லுதலும் தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களிலெல்லாஞ் சிறப்பாக நடந்தன. கோவில்களிலும், மடங்களிலும், செல்வர் மனைகளிலும் இப் பெரும்பணி நிகழ்ந்தது. மக்கள் திரள் திரளாகக் கூடி இவற்றைக் கேட்டனுபவித்தனர். இவ்வழக்கம் இடைக்காலச் சோழ அரசர்கள் காலத்திலுந் தமிழ் நாட்டில் மிகச் சிறப்பாக நடந்தது. ஈழநாட்டிலும் பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது.

யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே முதன் முதற் கந்தபுராணப் படிப்பைத் தொடக்கிய பேரறிஞர் நாவலர்தம் ஆசிரியர் **சேனாதிராயரேயாவார்**. நாவலர் பெருமான், தமது காலத்திலே பல கோயில்களிலும், வீடுகளிலும் புராணப்படிப்பு மிகச் சிறப்பாக நடத்தற்கு வேண்டியவற்றைச் செய்தார். இவருடைய ஆசிரியர்களுள் ஒருவராகிய **சரவணமுத்துப் புலவரும்** உரை சொல்வதிற் சிறந்து விளங்கினார். நாவலருடைய மருகர் **பொன்னம்பலப் பிள்ளை** இராமாயணம், பெரியபுராணம் கந்தபுராணம் முதலியவற்றுக்கு மிக நுட்பமாகப் பொருள் சொல்லி நாவலருடைய மதிப்பையும் பெற்றவர். வண்ணை வைத்தீசுவரர் கோவிலில் அக்காலத்திலே பல அறிஞர்கள் தமது உரை சொல்லுந்திறனைக் காட்டியுளர்.

கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களும், இராமாயணம், பாரதம் முதலியனவுஞ் சிறப்பாகப் படிக்கப் பட்டன.

நூற் பதிப்பு[1]

இக்காலத்திலே நூல்களைப் பதித்து வெளியிடுவது மிகவும் இலகுவான காரியம். முற்காலத்திலோவெனிற் பதிப்பாளர்களுக்குப் பல இடையூறுகள் இருந்தன. ஏட்டுருவிலிருந்த பழந்தமிழ் நூல்களைப் பதித்தோர் பட்ட துன்பங்கள் அளவிலாதன. இந்தத் துன்பங்களைப் பொருட்படுத்தாது தமிழ்த் தாய்க்குப் பெரும்பணி செய்தவர்களைத் தமிழுலகம் என்றும் போற்றக் கடமைப் பட்டுளது.

நாவலர் பதிப்புக்குத் தமிழ் நாட்டிலே ஒரு தனி மதிப்பு உண்டு. பிழைதிருத்தம் எனுஞ் சேர்க்கையின்றி நூல்களைப் பதித்த பெருமை நாவலருக்கே உரியது. எழுபதுக்கு மேற்பட்ட நூல்களை நாவலர் பதித்து வெளியிட்டுளர். தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையருரை, திருக்குறள், திருக்கோவையார், பிரயோக விவேகவுரை, சூடாமணி நிகண்டுரை, நன்னூல் விருத்தியுரை, பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம்,

1. கி. பி. 1577ஆம் ஆண்டிற்றான் முதன் முதலாகத் தமிழ் நூல் அச்சிடப்பட்டது. 1754இல் கொழும்பில் அச்சிடப்பட்டதொரு தமிழ்நூல் இந்தோனேசியாவின் தலைநகரிலுள்ள பொருட்காட்சிச்சாலையிலிருக்கிறது. யாழ்ப்பாணத்திற் கி. பி. 1821 இல் முதன் முதலாக அச்சியந்திரம் நிறுவப்பட்டது.

சிவஞானபோதச் சிற்றுரை முதலியன அந்நூல் களுட் சில.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துதவியர்க ளுள்ளே தாமோதரம் பிள்ளையினையும் அறிஞர்



சி. வை. தாமோதரம் பிள்ளை

கள் போற்றுவர். இறையனு ரகப்பொருளுரை, வீர சோழியவுரை, கலித்தொகை, தணிகைப் புராணம், சூளாமணி முதலியவற்றை அவர் பதிப் பித்தார். தொல்காப்பியம் முழுவதையும் உரை களுடன் முதலிற் பதிப்பித்த பெருமை பிள்ளை அவர்களுக்கே உரியது. சுன்னைக் குமாரசாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப் பொருள் முதலியவற்றைச் சிறந்த

குறிப்புரைகளுடன் அழகாகப் பதிப்பித்தார். இவரும் கனகசுந்தரம் பிள்ளையும் இராமாயணம் பாலகாண்டத்தைப் பதிப்பித்துதவினர். கனக சுந்தரம் பிள்ளையும் சில நூல்களைப் பதிப்பித்தும், பதிப்பித்தவர்களுக்கு உதவி செய்தும் பணியாற்றி யுளர். தமிழ் நாவலர் சரிதையை முதலிற் பதிப் பித்தவரும் இவரேயாவார். சிவஞான பாடியத் தினைச் சுவாமிநாத பண்டிதர் சிறந்த முறையில் அச்சிட்டார். மூவர் தேவாரங்களையும் இவர் அச்சிட்டுளர்.

நூல்கள் உரைகளேயன்றிச் சில நூல்களி லிருந்து சிறந்த செய்யுள்களையும் சிலர் திரட்டிப் பதிப்பித்துளர். முருகேச பண்டிதர் பாரதம், இராமாயணம் முதலியவற்றிலிருந்து சில செய்யுள் களை எடுத்துச் சேர்த்து இலக்கிய சங்கிரகம் என் றெரு நூலை வெளியிட்டார். குமாரசுவாமிப் புலவருஞ் சில கவிகளைத் திரட்டி வெளியிட்டுளர்.

இக்காலத்திலே பொருள் வருவாய் கருதிப் பலர் தமிழ் அச்சகங்களை நடத்துகின்றனர். ஆனல், நூல்களையும், பத்திரிகைகளையும் அச்சிட் டுத் தமிழ்த் தொண்டு செய்வதற்காகவே ஈழ நாட்டுப் புலவர்கள் சிலர் அச்சகங்களை முற்காலத் தில் நிறுவினர். இத்துறையிலும் நாவலரே பல ருக்கு வழிகாட்டினர். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அவர் அச்சகங்களை நிறுவினர். சபாபதி நாவலர், செந்திநாதையர், வல்வை வைத்திலிங்கம், வேலணையூர் கந்தப்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், மூத்ததம்பிச் செட்டியார், முத்துத்தம்பிப்பிள்ளை முதலானேரும் அச்சகங் களை நிறுவியுளர்.



சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்

அகராதிகள்

தமிழ் அகராதிகள் வெளியிடுவதிலும் ஈழ நாட்டுப் புலவர் அயராது உழைத்துப் புகழீட்டியுளர். தமிழ் மொழியிலே முதலிற்றோன்றிய அகராதி சதுரகராதியாகும். இதனை இத்தாலிய நாட்டிலிருந்து தமிழ் நாடு புகுந்து, தமிழினை நன்கு கற்றுத் தமிழ்ப்பணி புரிந்த வீரமாமுனிவர் ஆக்கினர். இதன் முதற் பகுதி கி. பி. 1819இல் அச்சிடப்பட்டது. இதன் பின்னர் தமிழ்ப் புலவர்களால் வெளியிடப்பட்ட அகராதிகளுள் முதலாவது யாழ்ப்பாணத்துச் சந்திரசேகர பண்டிதர் முதலியோரால் ஆக்கப்பட்டு மானிப்பாயிலிருந்த அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு, கி. பி. 1842இல் வெளிவந்த தமிழ் அகராதியாகும். இது மானிப்பாய் அகராதி எனவும், யாழ்ப்பாண அகராதி எனவும் வழங்குகிறது. இஃது ஏறக்குறைய 58,500 சொற்களைக் கொண்டது; சதுரகராதியினைப் போல நாலுமடங்கு பெரியது. இந்த அகராதியினைப் பெருப்பித்துப் பல விரிவகராதிகள் வெளியிடப்பட்டுள. இவையெல்லாம் கி. பி. 1905ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி வித்துவான் நா. கதிரைவேற் பிள்ளை வெளியிட்ட தமிழ்ப்பேரகராதியின் முன்னர்த் தம் பெருமையை யிழந்தன.

யாழ்ப்பாண அறிஞர்களுடைய அகராதி ஆக்கும் முயற்சி இவ்வளவில் நின்றுவிடவில்லை. புதுமுறையிற் சொற்களின் தோற்றம், இலக்கிய ஆட்சி முதலியனவுங் காட்டிச் சிறந்த அகராதி ஆக்குவதற்குக் கு. கதிரைவேற் பிள்ளை

அவர்கள் புலவர் பலருடைய உதவியுடன் முயன்ருர். 1910ஆம் ஆண்டில் அகரம் முதலாய சொற்களே வெளியிட்டார். இவர் தொகுத்த இந்த அகராதியின் ஏனைய பகுதிகளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் சங்கத் தமிழ் அகராதி எனும் பெயருடன் வெளியிட்டுளர். இந்த அகராதியில் 63,900 சொற்கள் உள. இலக்கியங் கற்பவர்களுக்குப் பயன்படும் பொருட்டுச் **சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்** 1914ஆம் ஆண்டிலே இலக்கியச் சொல் அகராதி ஒன்றினை வெளியிட்டார். அண்மையிற் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட தமிழ்ப்பேரகராதியினைச் சிறப்புற ஆக்குவதற்கு ஈழ நாட்டுப் புலவர்களும் பலர் உதவி செய்துளர்.

தமிழ்—தமிழ் அகராதிகளே அன்றித் தமிழ்—ஆங்கிலம், ஆங்கிலம்—தமிழ் அகராதிகளும் ஈழ நாட்டுப் புலவர்களால் வெளியிடப்பட்டுள. **உவின்சுலோ** என்பார் கி. பி. 1862இல் வெளியிட்ட தமிழ்—ஆங்கிலம் அகராதி, யாழ்ப்பாணத்தில் **கறல் விசுவநாதபிள்ளை, நெவின்சு சிதம்பரப்பிள்ளை** முதலியவர்களின் உதவியால் உருவாகியது. யாழ்ப்பாணத்திலிருந்த பாதிரிமாருள்ளே சிறந்தவராகிய **பார்சிவல்** ஓர் ஆங்கிலம்—தமிழ் அகராதியை வெளியிட்டார். நெவின்சு சிதம்பரப்பிள்ளையும் ஓர் ஆங்கிலம்—தமிழ் அகராதி தொகுத்துளர். **முத்துத்தம்பிப் பிள்ளை** 1908இல் ஆங்கிலம்—ஆங்கிலம்—தமிழ் அகராதியினைப் பதித்து வெளியிட்டார். நாவலர் **பெருமானும்** தமிழ்—ஆங்கிலம் அகராதி ஒன்றும், ஆங்கிலம்—தமிழ் அகராதி ஒன்றும் வெளியிட முயற்சி செய்துளர்.

கலைக் களஞ்சியம்

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் தமிழிலே கலைக்களஞ்சியம் ஒன்றினைச் சிறந்த முறையில் அமைத்து வெளியிட்டு வருகின்றனர். முதன் முதலாகத் தமிழ் நாட்டிலே கலைக் களஞ்சியம் ஒன்றை அமைத்து வெளியிட்ட பெருமை யாழ்ப்பாணம் நாவலர் கோட்டம் **முத்துத்தம்பிப் பிள்ளைக்** குரியதாகும். அவர் வெளியிட்ட அருமையான நூல் அபிதானகோசம் என்பது. இதனை அவர் 1902இல் வெளியிட்டார். இதன் பின்னரே அபிதான சிந்தாமணி வெளி வந்தது.

பத்திரிகைகள்

இப்பொழுதுள்ள தமிழ்ப் பத்திரிகைகளுள் மிகப் பழையது யாழ்ப்பாணத்திலே தோன்றிய 'உதய தாரகையே' யாகும். இது 1841இலே தொடங்கியது. இதுதான் இலங்கையில் முதன் முதற்றோன்றிய கீழ்நாட்டு மொழிப் பத்திரிகை. இதன் பின்னரும் பல பத்திரிகைகள் ஈழநாட்டிலே நடத்தப்பட்டன. இப்பொழுதும் வாழ்ந்துவரும் 'சத்திய வேத பாதுகாவலனும்', 'இந்து சாதனமும்' சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றியவை. 'சைவாபிமானி', 'இலங்காபிமானி', 'சைவசூக்குமார்த்த போதினி', 'ஞானமிர்தம்', 'ஞானப்பிரகாசம்', 'சன்மார்க்க போதினி', 'ஞானசித்தி', 'பாலியர் நேசன்[1]',

1. இப்பொழுது பாலர்களுக்கெனப் பல பத்திரிகைகளை வெளியிடுகின்றனர். இவற்றிற்கு வழிகாட்டியாக இலங்கையிற் றோன்றிய "பாலியர் நேசன்" கி. பி. 1859ஆம் ஆண்டிலே வெளியானது.

'விஞ்ஞான வர்த்தினி', 'இலங்கை நேசன்' முதலியன ஈழ நாட்டுப் புலவர்கள் நடத்திய பத்திரிகைகளிற் சிலவாகும். 'உதயபானு' எனும் பத்திரிகை தோன்றுவதற்கு நாவலரும் உதவி செய்தார். 'வைத்திய விசாரிணி', 'சோதிட பரிபாலினி' என்பன முறையே வைத்தியம், சோதிடம் என்பனவற்றை வளர்க்கத் தோன்றியன வாகும்.

தாமோதரம் பிள்ளை, செந்திநாதையர், முத்துத் தம்பிப் பிள்ளை முதலியோர் தென்னிந்தியாவில் நடந்த பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாயிருந்துந் தொண்டாற்றியுளர். ஈழநாட்டுப் புலவர்கள் சிலர் தென்னிந்தியாவிலும் சில பத்திரிகைகளை நடத்தியுளர்.

வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும்

தமிழ்ப் புலவர்கள் வரலாற்றினை முதன் முதலாக எழுதியவர் **சைமன் காசிச் செட்டி** என்பவராவார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ்ப் புலவர் வரலாறு [1] 1859இல் வெளியிடப்பட்டது. இதனைத் தழுவிச் **சதாசிவம் பிள்ளை** என்பார் 1889இல் 'பாவலர் சரித்திர தீபகத்தை' வெளியிட்டார். **குமாரசுவாமிப் புலவருடைய** 'தமிழ்ப் புலவர் வரலாறு' 1916இல் வெளிவந்தது. தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறு முதலியவற்றை விளக்கும் 'திராவிடப் பிரகாசிகையினைச்' **சபாபதி நாவலர்** செய்விய உரைநடையிலே தீட்டித் தந்தார். **பூபாலபிள்ளையும், முத்துத் தம்பிப்**

---

1. Tamil Plutarch.

சுவாமி ஞானப் பிரகாசர்

பிள்ளையும் 'தென் மொழி வரலாறு' எனும் நூலைத் தனித்தனி எழுதினார்கள். பண்டைத் தமிழ் மக்களின் வரலாற்றினை மிகச் செப்பமாகத் தெரிவிக்கும் ஆராய்ச்சி நூல்கள் யாவற்றுக்கும் முந்தியது **கனகசபைப் பிள்ளை** ஆங்கிலத்தில் எழுதிய '1800 வருடங்களுக்கு முந்திய தமிழர்' எனுஞ் சிறந்த நூலாகும். சங்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்வார்க்கு இன்றும் இஃது உதவி செய்கிறது. 'வஞ்சிமாநகர் ஆராய்ச்சி' எனும் நூலைப் **பொன்னம்பலப்பிள்ளை** எழுதினார்.

யாழ்ப்பாண நாட்டின் வரலாற்றினை விளக்குதற்கு எழுந்த நூலே 'யாழ்ப்பாண வைபவமாலையாகும்'. யாழ்ப்பாண வரலாற்றைப் பற்றிப் பல நூல்களை வேறு அறிஞர்களும் எழுதியுளர். **க. வேற்பிள்ளை** 'யாழ்ப்பாண வைபவ கௌமுதியினையும்', **சுவாமி ஞானப்பிரகாசர்** 'யாழ்ப்பாண வைபவ விமர்சனத்தையும்' முதலியார் **இராசநாயகம்** 'யாழ்ப்பாணச் சரித்திரத்தையும்' தந்தனர். **முத்துத் தம்பிப் பிள்ளையும்** 'யாழ்ப்பாணச் சரித்திரம்' ஒன்றும், 'இலங்கைச் சரித்திரம்' ஒன்றும் ஆக்கியுளர்.

முத்தமிழ் வித்தகராக விளங்கிய **விபுலானந்த அடிகளாரின்** அரும் பெரும் ஆராய்ச்சி நூலாகிய 'யாழ்நூல்' தமிழ் மக்கள் யாவருக்குமே பெருமை அளிக்கத்தக்கது. இசைக்கலை வரலாற்றை விளக்கும் இந்நூலுடன் நாடக இயல்புகளை விளக்கும் 'மதங்க சூளாமணியினையும்' அடிகளார் தமிழகத்துக்கு அளித்துளர்.

இப்பொழுது தமிழகத்திலே மொழிநூல் ஆராய்ச்சி சிறப்படைந்து வருகின்றது. மொழி

நூல் ஆராய்ச்சியே உருவெடுத்தாற் போன்று ஈழநாட்டில் விளங்கியவர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆவார். இவருடைய ஆராய்ச்சிப் புலமையினைத்

விபுலானந்த அடிகள்

'தமிழ் அமைப்புற்ற வரலாறு' எனும் நூலும், 'சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி' முதலாறு பாகங்களும் நன்கு காட்டும்.

பல்கலை நூல்கள்

வைத்தியம், சோதிடம், வானநூல், கணிதம், பூமிசாத்திரம் முதலியன பற்றிய நூல்களும்

இலங்கையிலே தோன்றின. இவற்றிலே சிலவற்றைப் பற்றி முன்னருங் குறிப்பிட்டுள்ளேன். செகராசசேகரம், பரராசசேகரம் முதலியனவும் வரத பண்டிதர் இயற்றிய அமுதாகரமும் சிறந்த வைத்திய நூல்களாகும். சோதிட நூல்களுள்ளே **போகராச பண்டிதர்** இயற்றிய சரசோதிமாலையும், **சோம ஐயர்** இயற்றிய செகராசசேகர மாலையும் குறிப்பிடத் தக்கன. **சின்னத்தம்பி** சோதிடச் சுருக்கம், நில அளவைச் சூத்திரம் எனும் நூல்களை எழுதினர். **அ. சாதசிவம் பிள்ளை** வான சாத்திர நூல் ஒன்றை எழுதினர்.

விசுவநாத சாத்திரிகள் சோதிட சாத்திர விற்பன்னராக விளங்கி இராசகணிதன்[1] என்னும் பட்டமும் பெற்றுர். இவருடைய மூதாதையரான **இராமலிங்கையர்** 1667ஆம் ஆண்டில் முதன் முதல் வாக்கிய முறையிற் பஞ்சாங்கத்தைக் கணித்து வெளிப்படுத்திஞர். **ஏரம்பையர்** கணு நூல் ஒன்றினை வெளியிட்டார். சந்தான தீபிகை எனும் நூலை **இராமலிங்கையர்** இயற்றினர். இலங்கைப் பூமி சாத்திரமொன்று நாவலரால் எழுதப்பட்டுள்ளது. **விசுவநாத பிள்ளை** ஆக்கிய வீசகணிதம் பல புதுமையான கணக்குகளைக் கொண்டது.

மொழி பெயர்ப்பு நூல்கள்

சமக்கிருதம் ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து ஈழ நாட்டுப் புலவர்கள் பல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாட்டிலும் உரையிலும் இயற்றியுளர். வடமொழியிலிருந்து

1. Almanac Maker to His Majesty George IV.

மொழி பெயர்க்கப்பட்ட இரகுவமிசம், சிசுபால சரிதம் முதலிய சில நூல்களை முன்னர்க் குறிப்பிட்டேன். இவற்றை விட இலக்கியம், சமயம், நியாயம், தருக்கம், நீதி முதலியன பற்றிய மொழி பெயர்ப்பு நூல்கள் பலவாகும். அவற்றுட் சில வற்றை யீண்டுக்காண்க.

சாந்தோக்கியம், சாங்கியம் என்பனவற்றை **நாகநாத பண்டிதரும்**, வில்கணீயத்தைக் **கணபதிப் பிள்ளையும்**, பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என்பவற்றைச் **சபாபதி நாவலரும்** மொழி பெயர்த்தனர். **நாவலர் பெருமான்** தருக்க சங்கிரகத்தின் உரைகளாகிய நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம் பட்டீயம் என்பவைகளையும் அன்னம் பட்டீயத்தின் உரையாகிய நீல கண்டீயத்தையும் மொழி பெயர்த்தார். நீலகண்ட பாடியத் தமிழ் மொழிபெயர்ப்பினைச் செய்தவர் **செந்திநாதையர்**. தர்க்காமிர்த மொழிபெயர்ப்பினைச் செய்தவர் **திருஞான சம்பந்தப் பிள்ளை**. **குமாரசுவாமிப் புலவர்** இயற்றிய மேகதூதக் காரிகை, இராமோ தந்தம், சாணக்கிய நீதி வெண்பா முதலியனவும் **சதாசிவ ஐயர்** செய்த தேவி தோத்திர மஞ்சரியும் மொழி பெயர்ப்பு நூல்களே. **நெவின்சு சிதம்பரப் பிள்ளை** இயற்றிய நியாய இலக்கணம் ஆங்கிலத்திலுள்ள தர்க்க விதிகளின் மொழி பெயர்ப்பாகும்.

அமெரிக்க அகத்தியர் எனப் போற்றப்படும் **கிறீன்**[1] என்பார் யாழ்ப்பாணத்திற்குவந்து மானிப் பாயில் வைத்தியராயிருக்கும் பொழுது, பல மாண

1. Dr. Samuel Fish Green.

வர்களுக்குத் தமிழிலே வைத்திய சாத்திரத்தைக் கற்பிக்க முயன்றுர். தம் முயற்சி நற்பயனளிப்பதற்குத் தமிழிலே பல நூல்கள் வேண்டும் என்றுணர்ந்தார். ஆங்கில மொழியிலே உள்ள பல வைத்திய நூல்களையும் பிற சாத்திர நூல்களையுந் தம்முடைய மாணவர்களுடைய உதவியுடன் தமிழிலே மொழி பெயர்த்துத் தந்து செயற்கருஞ் செயல் செய்த பெருமையினைக் கொண்டார்; என்றுமழியாப் புகழ் பெற்றுர். அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல்[1], இரண வைத்தியம்[2], வைத்தியாகரம்[3], கெமிஸ்தம்,[4] மனுஷ சுகரணம்[5], இந்து பதார்த்த சாரம்[6] முதலியன இவர் பதிப்பித்த நூல்களாகும். வைத்தியக் கலைச் சொற்கோவைகளையும் இவர் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலத்திலே தமிழ்ப்பணி

நம் நாட்டு அரசியல் மொழியாகவிருந்த ஆங்கில மொழி உலக மொழிகளுள் ஒன்றுகவும் விளங்குகிறது. தமிழ் மொழி, தமிழ் மக்கள், அவர்தம் பண்பாடு, கலைச் செல்வம், முதலியன பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிடுதலும், தமிழ் நூல்களை அம் மொழியிற் பெயர்த்தலும் தமிழின் பெருமையையும் தமிழ் மக்களின் சிறப்பையும் உலகறியச் செய்யும் பெரும்பணியாகும்.

இத்துறைகளிலும் ஈழநாட்டுப் புலவர்கள் உழைத்துளர். கலைமாச் செல்வர் ஆனந்தக்

1. Cutter's Anatomy, Physiology and Hygiene 2. Druitt's Surgery; 3. Hooper's Physician's, Vade Macum, 4. Well's Chemistry, 5. Dalton's Physiology, 6. Waring's Pharmacopoeia of India.

குமாரசுவாமி கலைகளைப் பற்றிய பல நூல்களை எழுதி இந்திய நாட்டினுக்கும் பெருமையளித்தார். கனகசபைப் பிள்ளை எழுதிய "1800 வருடங்களுக்கு முந்திய தமிழர்"[1] எனும் நூலின் சிறப்பினைப் பற்றி முன்னர்க் கூறியுளேன். சைமன் காசிச் செட்டி என்பார் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றையும், யாழப்பாண வரலாற்றையும் எழுதினர். சேர். பொன். அருணுசலம் பல கட்டுரைகள் வரைந்தார். சிறீகாந்தா ஔவையாரைப் பற்றி எழுதி அவருடைய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் மூதுரை முதலியவற்றையும் மொழி பெயர்த்தார். யாழ்ப்பாண வைபவ மாலையினைப் பிறிற்ரேவும், கைலாசமாலையினை முத்துத் தம்பிப் பிள்ளையும், தாயுமானவர் பாடல்களைக் கலாநிதி ஐசக்குத்தம்பையாவும் மொழி பெயர்த்தனர். யே. வி. செல்லையா செய்த பத்துப் பாட்டு மொழி பெயர்ப்பு மிக அருமையாக அமைந்துளது. கலாநிதி கொயிசிங்கன்[2] சிவஞான போதம், சிவப்பிரகாசம், தத்துவக் கட்டளை என்பவற்றை 1854இலேயே மொழி பெயர்த்தார். பழைய யாழ்ப்பாணம்[3] எனும் நூலை முதலியார் இராசநாயகமும், யாழ்ப்பாணத்தரசர்[4] எனும் நூலைச் சுவாமிஞானப் பிரகாசரும் எழுதினர்கள்.

தமிழ்க் கல்வெட்டுக்கள்

ஈழத்திலே தமிழ்க் கல்வெட்டுக்களும் பல உள. தமிழர்களே யன்றிச் சிங்கள மன்னரும் தமிழிலே கல் வெட்டுக்களை ஆக்குவித்துளர். கல்வெட்டுக்கள்

1. Tamils 1800 years ago, 2. Dr. H. R. Hoisington
3. Ancient Jaffna, 4. The Kings of Jaffna.

சிலவற்றிலே சிறந்த செய்யுள்களுங் காணப்படு கின்றன. பொலனறுவையிற் பதினொரு கல் வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அங்குள்ள சிவன் கோயிலிலுள்ள கல் வெட்டுக்களில் இராசேந் திரன், ஆதிராசேந்திரன் முதலிய சோழ அரசர் களுடைய கல் வெட்டுக்களும் உள. விசயபாகு மன்னனின் கல்வெட்டு ஒன்றினாற் பொலனறு வைக்கு விசயராச புரமென்ற பெயருமுண்டு என்றறியப் படுகின்றது. திரிகோணமலைக் கோட்டை வாசலிற் சிதைந்த உருவத்தில் ஒரு வெண்பாக் காணப்படுகிறது. அதனைப் பின்வரும் செய்யுளாகச் சிலர் நிரப்பியுளர்.

" முன்னே குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னவன்பின்
பொண்ணாத தனை இயற்றஅழித் தேவைத்து
எண்ணாரே பின்னரசர் கள் "

அநுராதபுரியில் ஏழு கல் வெட்டுக்கள் கிடைத் துள. இவற்றுள் இரண்டு கி. பி. மூன்றாம் நூற் றாண்டில் ஆண்ட சிறீசங்கபோதி மன்னனுடைய கல்வெட்டுக்களாகும். பல பகுதிகள் அழிந்து போன ஒரு கல்வெட்டிற் பின்வரும் அழகான வெண்பாக் காணப்படுகிறது.

" போதி நிழலமர்ந்த புண்ணியன்போல் எவ்வுயிர்க்கும்
தீதில் அருள்சுரக்கும் சிந்தையான்—ஆதி
வருதன்மம் குன்றாத மாதவன்மாக் கோதை
ஒருதன்மை பால னுளன் "

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட மகா பராக்கிரமவாகுவினுடைய தமிழ்க் கல் வெட்டொன்று நயினா தீவிலுண்டு. கொழும்பி லுள்ள பல் பொருட்காட்சிச் சாலையிலும் சில கல் வெட்டுக்கள் சேர்த்து வைக்கப்பட்டுள. இவற்றிற் சிலவற்றிலே மாதோட்டத்தினைப்பற்றிய செய்தி

கள் காணப்படுகின்றன. கொத்தகமக் கல்வெட்டு ஒன்றிலே காணப்படும் வெண்பா அறிஞர்க்கு நல்விருந்தளிக்குந் தன்மையது.

“ கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்
சிங்கை நகராரியனைச் சேரா வனுரேசர்
தங்கண் மடமாதர் தாம் ”

இந்தப்பாட்டுக்குப் பலவகையான கருத்துக்களைக் கூறுவர். இது பதினாலாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தையாண்ட சயவீரசிங்கையாரியன் சிங்களரை வென்ற செய்தியைக்குறிக்கிறது.

நாட்டுப் பாடல்கள்

‘ மக்கள் இலக்கியம் ’, ‘ தொழிலாளிகளின் பாடல்கள் ’, ‘ கட்டில்லாக் கவிதைகள் ’ என்று பலவாறு போற்றப்படும் நாட்டுப்பாடல்களும் பல ஈழ நாட்டிலே உள. மட்டக்களப்புப் பகுதியே இப்பாடல்களுக்குப் பேர்போனது. அங்குள்ள தமிழ் மக்களே யன்றிச் சோனகப் பெண்மணிகளும் பல பாடல்களைப் பாடியின்புறுகின்றனர். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள நாட்டுப்பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு எனும் பெயருடன் ஒரு நூலினைச் சதாசிவ ஐயர் வெளியிட்டுளர். யாழ்ப்பாணப் பகுதியிற் றிருமணச் சடங்கின் போது மணமகனையும் மணமகளையுங் குடிமக்கள் வாழ்த்துவது முன்னை நாள் மரபு.

“ முத்தாலே ஆலாத்தி முகத்திலே தானெடுத்து
பவளத்தால் ஆலாத்தி பக்கத்தில் நின்றெடுத்து [யாம்
ஆலாத்திப் பெண்களெல்லாம் அணியணியாய் நிற்பினை
மாமியார் எல்லோரும் மறைந்துநின்று பார்ப்பினையாம்
மச்சாள்மார் எல்லோரும் மதிலேறிப் பார்ப்பினையாம். ”

இந்தப்பாடலை மணமகனின் குடிமக்கள் பாடுவார்கள். இதற்கு எதிர்ப்பாட்டாக மணமகளின் குடிமக்கள் மேல்வரும் பாடலைப் பாடுவார்கள்.

" பள்ள வயலுடைய பாண்டியனூர் தன்மகளை
கொள்ளவல்லோ வந்துநின்று கோடிதவங் கொள்ளுகிறார்
பெண்பிறந்தார் வாசலிலே பெட்டிவரும் பேழைவரும்
சீகாழி மேளம்வரும் வெள்ளைக் குதிரைவரும்
அரும்புகுத்தித் தாலிகளும் விளிம்புகுத்திச் சேலைகளும்
வயிரகிரிப் பட்டு வாய்த்ததோ வாழ்மயிலே."

ஈழத்தமிழகத்தில் வழங்கிவரும் தாலாட்டுப் பாடல்களும், ஒப்பாரிகளும் படிப்போர் கேட்போருக்குப் பெருமகிழ்வளிக்கத் தக்கன.

" பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே,
அண்ணை அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே
ஆண்பனையில் நொங்கே அணில்கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான்கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்."

இஃது அழுகின்ற குழந்தையைத் தாலாட்டுந் தாய் பாடும் பாடல்களுள் ஒன்று.

மாமியாரை இழந்த மருமகள் பாடும் ஒப்பாரியில் ஒரு பகுதியைப் படித்து மேற் செல்வோம்.

' கொப்படங்கப் பூத்தீரோ—நீரும்
குலை நெருங்கக் காய்த்தீரோ !
குலைதாங்க மாட்டாமல்—நீரும்
கொடி அறுந்து போனீரோ ! '

' சாத்தாப் பெருங் கதவை—நீர்
சாத்தி விட்டுப் போனீரோ !
பூட்டாப் பெருங் கதவை—நீர்
பூட்டி வைத்துப் போனீரோ ! '

' உற்ற கதை பேச—எங்களுக்கு
ஒரு நாளோ செல்லுமெனை
பட்ட கதை பேச—எங்களுக்குப்
பல நாளோ செல்லுமெனை '

' உச்சிப் பொழுதிலே—நீயும்
ஓடி ஒளித்தாயே
மாலைப் பொழுதிலே—நீயும்
மாண்டு மடிந்தாயோ '.

'தோளோ துடிக்கவில்லை—எனக்குத்
துர்க்குறியோ காணவில்லை;
ஆடுந் துடைகளெல்லாம்—எனக்கு
அம்பாய்ப் பறக்கவில்லை'.

மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் பாடல்களுள்ளே காதலர்களுடைய பாடல்கள் பல்சுவை நிறைந்தன. இவற்றைச் சோனக மக்கள் இன்றும் பாடிப்பாடி யின்புறுகின்றனர். அவர்களுடைய இனத்தைச் சேர்ந்த ஒரு காதலன் தனக்கு மச்சாள் முறையான காதலியைச் சந்தித்து உரையாடப் பலநாள்கள் முயன்றான். ஒருநாள் அவர்களிருவரும் சந்தித்தனர். பின்வரும் பாடல்களிலே உரையாடினர். காதலன் பேசுகிறான் :

'அன்புக் களஞ்சியமே! அழகொழுகுஞ் சித்திரமே!
கற்புக் கணிகலமே! உன்னைக் காணவென்று
[காத்திருந்தேன்'
'மாமியட புள்ளே! மகிழம்பு வாயுடையாள்,
பெருக்கப் பெருக்க—என்னோடு பேச மனத்தாபமென்ன
'அன்ன நடையாளே! அலங்காரப் பெண்மயிலே!
உன்னாலே என்தேகம் உருக்குலைந்து போகுதடி.'

காதலி கூறுகிறாள் :

'என்னை நினைந்து மச்சான் ஏன்கவலை கொள்ளுகிறாய்
உன்னுணை என்சடலம் உனக்கே உரியதுகா.'

மீண்டும் காதலன் ஒரு வேண்டுகோள் விடுக்கிறான் :

'சுந்தரியே! அம்புயமே! சொல்லுக்கொரு நங்கணமே![1]
அந்தரித்த என்னை அழைத்தாதரிக்க மாட்டாயா?'

காதலி தன்னிடரைப் புலப்படுத்துகிறாள் :

'வாவென் றழைத்திடுவேன், வாசலிலே பாய்தருவேன்
வாப்பா அறிந்தால் வாளெடுத்து வீசிடுவார்'.

காதலன் உருகி உருகி இரக்கிறான் :

'கல்லும் உருகும் காராம்பசு கண்டனும்
மலையும் உருகும்—கிளியாருன் மனம்உருக
[வில்லையோகா'[2]

1. நங்கணம்—நாகணவாய், 2. கா - அசைநிலை.

காதலியின் மறுமொழி :

'மாமிமகனே ! என்றை மருக்கொழுந்து வெற்றிலேயே !
இன்பக் கடலே ! எனக்கு இரக்கமெல்லாம் உன்மேலே'.

பழமொழிகள்

ஒரு மொழிக்கு உறுதியையுஞ் சிறப்பையும் நல்குவன அம்மொழியிலுள்ள பழமொழிகளாகும். தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் வழங்கும் பழமொழிகள் பலவாகும். இவை யாவற்றையுந் திரட்டி வெளியிடுதற்கு இன்னும் ஒருவரும் முயலவில்லே. ஓரின மக்கள் வழங்கும் பழமொழிகள் தொடக்கத்திற் பெரும்பாலும் ஒருதன்மையனவாயிருப்பினுங் காலஞ் செல்லச் செல்ல அவற்றின் சொற்களிலே சில மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. சில பழமொழிகள் வழக்கிலிருந்து மறையப் புதியன தோன்றி நிலேபெறுதலு முண்டு. பழமொழி நானூறு எனும் நூலிலுள்ள பழமொழிகளிற் சில இப்பொழுது வழக்கிலில்லே; சில உருமாறி வழங்குகின்றன.

இலங்கையில் வழங்கும் பழமொழிகள் பலவற்றைப் பார்சிவல் பாதிரியார் சென்ற நூற்றுண்டிலே தொகுத்து வெளியிட்டுளர். இலங்கையிலே நன்கு வழங்குவன வென்று கூறத்தக்க சில பழமொழிகளேக் கீழே காண்க.[1]

அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.

அஞ்சும் மூன்றும் உண்டானுல் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள்.

1. இவற்றிலே சில திரிந்த உருவத்திலே தமிழ் நாட்டிலும் வழங்கலாம்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.

ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்.

இரு தோணியிற் கால் வைக்காதே.

இனம் இனத்தைச் சேரும்.

ஈட்டி எட்டினமட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.

உலையை மூடலாம் ஊரை மூடமுடியாது.

ஊமையர் சபையில் ஊளறுவாயன் மகாவித்துவான்.

கையில் வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்?

குரைக்கிற நாய் கடியாது.

கிட்ட இருந்தால் முட்டப்பகை.

சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா?

தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை.

தாரமுங் குருவுந் தலைவிதிப்படி.

துரும்பும் பல்குத்த உதவும்.

தெருவில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு அடிக்காதே.

நாய்க்கேன் போர்த் தேங்காய்.

நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போகலாமா?

பல எலி கூடினூற் புற்றெடுக்காது.

பாடுபட்டவன் பட்டத்துக்கிருப்பான்.

பாத்திர மறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெண்கொடு.

பால் தொட்டுப் பால் கறக்கவேண்டும்.

புதுமைக்கு வண்ணான் கரை கட்டி வெளுப்பான்.

பொய் சொன்ன வாய்க்குப் பொரியுங் கிடையாது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்.

வெறுங்கை முழம் போடுமா?

பேச்சுத் தமிழ்

ஒரு மொழியினைப் பேசும் மக்கள் ஒரு நாட்டில் மாத்திரமே வாழ்ந்தாலும், அந்நாட்டின் ஊர்கள் தோறும் வாழும் மக்களின் தொழில், கல்வி, சூழல், முதலியவற்றுக்கேற்ப அவர்களுடைய பேச்சு வழக்கிலே வேறுபாடுகள் பல இருப்பதை நாம் காண்கிறோம். இவ்வேறுபாடுகளைத் தொல்காப்பியனார், 'சேரி மொழி' எனவும், உரையாசிரியர்கள் 'பாடிமாற்றங்கள்' எனவுங் குறிப்பிட்டுளர். தமிழ் நாட்டிலும் திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, கோவை முதலிய மாவட்டங்களில் வாழும் மக்களுடைய பேச்சு வழக்குக்களில் வேறுபாடுகள் இருக்கின்றன. இவ்வாறே தமிழ் நாட்டுப் பேச்சு வழக்கும் ஈழத் தமிழகத்தின் பேச்சு வழக்கும் வேறுபாடுடையனவாயிருக்கின்றன. இவ் வேறுபாடு, சொற்கள், சொற்றொடர்கள் முதலியவற்றை மாத்திரம் பற்றியதன்று. சொற்களை ஒலிக்கும் முறையிலும் வேறுபாடு உண்டு. இதற்குக் காரணம் இலங்கை தமிழ்நாட்டிலிருந்து கடலாலும் அரசியலாலும் பிரிக்கப்பட்டிருப்பதேயாகும்.

இலங்கைத் தமிழர் ஒருவர், சில ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்துவிட்டு இலங்கைக்கு வந்தால், இலங்கையிலுள்ள அவருடைய நண்பர்களும் உறவினரும் அவருடைய பேச்சு, வடக்கத்தியார்[1] பேச்சாகிவிட்டது என்பார்கள். சிறிது இழுத்து அசைத்து ஒலிப்பது தமிழ் நாட்டார் வழக்கம்.

இலங்கைத் தமிழர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்ருல், அவர்களே எந்நாட்டவர் என்று அறியாத தமிழ் நாட்டு மக்கள், அவர்கள் பேசுவதைக் கேட்டவுடன் "உங்களுடைய ஊர் மலேயாளமா?" என்று வினவுவார்கள். இவ்வாறு பல முறை பலர் என்னைக் கேட்டுளர்.

விபுலானந்த அடிகளார் தம்முடைய அனுபவத்தைப் பின்வருமாறு எழுதி இருக்கிருர்: 'ஈழநாட்டிற் பிறந்தேனுயினும் ஈழத்து வழக்குத் தமிழில் எனக்கு அதிக பழக்கமில்லை. கற்றது புத்தகத் தமிழ்; கலந்து பழகி ஒரு சிறிது பயின்று கொண்டது சோழ நாட்டுத் தமிழ். இலங்கையிலே நான் நண்பரோடு உரையாடும் போது, என் உரையைக் கேட்டோர், "சாமி பேசுவது வடக்கத்திய தமிழ்" என்று சொல்ல நான் பல முறை கேட்டதுண்டு......இஃது இப்படியிருக்க; ஒரு நாள் சென்னை ஜார்ஜ் டவுனிலே ஒரு கடைக்காரன் என்னை நோக்கி, "சாமிக்கு ஊர் பாலேக்காடா" என்று வினவியதுண்டு.'

இலங்கைத் தமிழருடைய ஒலிமுறை மலே

1. தமிழ் நாடு இலங்கைக்கு வடக்கேயிருப்பதால் இலங்கைத் தமிழர் தமிழ் நாட்டாரை "வடக்கத்தியார்" என்பர்.

யாளத்தாருடைய ஒலி முறையோடு ஒத்ததாயிருக்கிறதென்கின்றனர். மலையாளத்தாரைப் போல அவர்களும் "ஆ"வை "ஓ"ஆக்கி ஒலிக்கின்றனர். ஒலி அழுத்தம், ஒலி நீட்டம் முதலியனவும் மலையாள மக்களையும் இலங்கைத் தமிழரையும் ஓரினத்தவராக்குகின்றனவென்பர்.

முதன் முறையாகச் சென்னைமா நகருக்குச் செல்லும் இலங்கைத் தமிழ் மக்கள், அங்கு தெருவிலும், திண்ணையிலும், விடுதிச் சாலைகளிலும் வியாபார நிலையங்களிலும், ஊர்திகளிலும் பேசப்படுந் தமிழை இலகுவில் விளங்கிக் கொள்ளுதல் முடியாது. ஜாஸ்தி, கம்மி, வயிதா, அசல், பேஷாக, ஜோராக, ரொம்ப, ஜாகை, துட்டு, கஜம், ஜாதம், தூங்கப் போதல், ஸ்நானம், துட்டி, செஞ்சுங்கள், பொம்மனாட்டிகள், அந்தண்டை, ஒண்டி, அவன்கள், இவன்கள், காப்பி, திக்கானரீ, பீரோ, வாரம், வக்கீல், ஆரஞ்சு, சாத்துக்குடி— இவை போன்ற பல சொற்கள் அவர்களைத் திக்கு முக்காடச் செய்யும்.

யாழ்ப்பாணத்துக்கு வருந் தமிழ் நாட்டாருக்கும் பின்வருவன போன்ற பல சொற்கள் புதியனவாகத் தோன்றும்: ஒழுங்கை, இடியப்பம், சொதி, வருத்தம், மணித்தியாலம், கோச்சி, கந்தோர், அப்புக்காத்து, கோப்பி, வெள்ளென, தெண்டித்தல், கதைத்தல், கெதியாக, பொடிச்சி, அலுமாரி, கிழமை, பாவித்தல், சால்வை.

நாம், நாங்கள் எனுமிரு சொற்களையும் இலங்கைத் தமிழர் தன்மைக்கும், தன்மையோடு சேர்ந்த முன்னிலைக்கும் உரியனவாக வழங்குகிறார்கள். தமிழகத்தில் நாங்கள் என்பது தன்

மைக்கே யுரியது ; நாம் என்பதே தன்மையையும் முன்னிலையையுஞ் சேர்த்துக் குறிக்கிறது.

கொச்சைச் சொற்களும், சிதைந்த சொற்களும், அயன்மொழிச் சொற்களும் பேச்சு வழக்கிலே கலத்தல் கண்கூடு. இதனால் ஊர் தோறும் பேச்சுவழக்கு வேறுபாடுடையதாகவே இருக்கும். எனவே, ஒரு மொழியைப் பேசி இரு நாடுகளில் வாழும் மக்களில், எந்நாட்டு மக்கள் தூய்மை, இலக்கண அமைதி முதலியன கூடுதலாகவுடைய பேச்சைப் பேசுகிறார்களென் பதை முடிவு செய்தல் சாலாது. எனினும், சென்னை மாநகரிலும் யாழ்ப்பாணத்திலும் வாழுந் தமிழ் மக்களுடைய பேச்சிற் பயிலுஞ் செந்தமிழ்ச் சொற்களைத் தனித்தனி கணக்கிட்டால், யாழ்ப் பாண மக்களுடைய பேச்சிலே பயிலுஞ் செந் தமிழ்ச் சொற்களே கூடியன என்பதைக் காண லாம். இதனாற்றான், கலியாண சுந்தரனார், மறை மலையடிகள் போன்ற தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் யாழ்ப்பாணத் தமிழைத் 'தூய தமிழ்,' 'இலக் கணத் தமிழ்,' 'செந்தமிழ்,' என்று போற்றினார் கள் போலும் !

தூய்மை, இலக்கண அமைதி முதலியவற் றிலே பத்திரிகைத் தமிழ் பேச்சுத் தமிழுக்கும் புத்தகத் தமிழுக்கும் இடைப்பட்டு விளங்குகிற தெனலாம். தமிழ்நாட்டுப் பத்திரிகைத் தமிழையும் இலங்கை மக்களுடைய பத்திரிகைத் தமிழையும் ஒப்பிட்டுப் பார்த்தாலும், இலங்கையிலுள்ள பத்திரிகைகளின் தமிழிலே செந்தமிழ் மணங்கூடு தலாகக் கமழ்வதை அறியலாம்.

இன்னும், சென்னை அரசினர் வெளியிட்ட

கலைச்சொற் கோவையை இலங்கை அரசினர் வெளியிட்ட கலைச்சொற் கோவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் இலங்கைத் தமிழர் இலக்கணத் தமிழை—தூயதமிழை—செந்தமிழைப் போற்றும் ஆர்வம் உடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவர். சென்னை அரசினருடைய கலைச்சொற் கோவையிலுள்ள பல சொற்கள் தமிழுருவாக்கப் படாதன; தொல்காப்பியர் நன்னூலார் முதலிய புலவர் பெருமக்கள் வகுத்து வைத்த இலக்கண விதிகளுக்கு மாருகவுள்ளன. இலங்கையரசினருடைய கலைச்சொற் கோவையிலே செந்தமிழ்ச் சொற்களும், இலக்கண விதிகளுக்கமையத் தமிழுருவாக்கப்பட்ட பிறமொழிச் சொற்களுமேயுள.

ஈழத் தமிழகத்திலும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குக்கும் மட்டக்களப்புப் பேச்சுவழக்குக்கும் வேறுபாடுகள் சிலவுள. யாழ்ப்பாணப் பகுதியிலேயே சில ஊர்களிலுள்ள சொற்கள் வேறு சில ஊர்களில் விகாரமடைகின்றன. சில ஊர்களில் 'அகப்பை' என்று வழங்கப்படுவது வேறு சில ஊர்களில் 'ஏப்பை' ஆகிறது; 'பனுவில்' எனுஞ் சொல் குறிக்கும் பொருளைச் சில ஊர்களில் 'உமிழ்' எனுஞ் சொல் குறிக்கிறது.

யாழ்ப்பாணம் ஈழத் தமிழகத்தின் வடபகுதியில் இருக்கிறது. மட்டக்களப்புத் தென்கீழ்ப் பகுதியில் இருக்கிறது; சிங்கள நாட்டோடுஞ் சேர்ந்திருக்கிறது. இதனுலேதான் யாழ்ப்பாணத்தின் வழக்கு மொழிக்கும் மட்டக்களப்பின் வழக்கு மொழிக்கும் வேறுபாடுகள் ஏற்பட்டுள.

'காணவில்லை' என்பது யாழ்ப்பாணத்தில் 'காணயில்லை' என்றும், மட்டக்களப்பில் 'காணல்ல'

என்றும் ஆகியுளது. யாழ்ப்பாணத்தார் வழங்கும் 'கஷ்டம்' எனுஞ் சொல் குறிக்கும் பொருளை மட்டக்களப்பார் "பொறுப்பு" எனும் அழகான சொல்லினுற் குறிப்பிடுகிருர்கள். 'அவனிட மிருந்து', 'உங்களைத்தான்', 'எங்களுடைய', முதலிய சொற்கள் முறையே 'அவனிட்டெருந்து', 'ஒங்களத்தான்', 'எங்கட' முதலியனவாக மட்டக் களப்பு மக்களுடைய வாயில் உலாவுகின்றன. மைத்துனன், மைத்துனி எனுஞ் சொற்களை மட்டக்களப்பிலுள்ள சில ஊர்களில், மெச்சான், மெச்சி என வழங்குகின்றனர்.

நன்னூலார் கூறிய "கா" எனும் அசைநிலை இடைச் சொல் இன்றும் மட்டக்களப்பில் வாழ் கிறது. 'எலக்கா இங்கே சத்து வந்திற்றுப் போ', 'என்னகா சொல்ருய்', 'எங்கா நீ வரவிரல்லே'— இப்படிக் 'கா'வை வைத்து மட்டக்களப்பு மக் கள் பேசுகிருர்கள். அவர்களுடைய நாட்டுப் பாடல்களிலும் இந்தக் "கா" வைக் காணலாம். 'எல்லா' எனும் சங்ககாலச் சொல்லையே மட்டக் களப்பு மக்கள் 'எலக்கா' 'இலக்கா' என்பன வாக ஆக்கி வழங்கி வருகிருர்கள்.

மட்டக் களப்புத் தமிழ் வழக்கிலேயுள்ள பல சொற்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. இவற்றுள்ளே முடுகு[1], நறணை, விரசு, உவட்டு, ஏமம், மறுகா, கிறுகு, வண்ணக்கன், முல்லைக்காரன், போடி யார் முதலியன குறிப்பிடத்தக்கன.

மட்டக் களப்பு மக்கள் நெற்களத்திலே பேசுஞ்

1. முடுகு முதலியவற்றின் பொருள் முறையே: கிட்டச் செல், நறுநெய், நெருங்கு, பெருக்கு, யாமம், மறுதரம், திரும்பு, கணக்கறிஞன், உழவர் தலைவன், உழுவித்துண்பவர்.

சொற்களிற் பல குழூஉக் குறிகளாக வுள்ளன. மாடுகளை 'வாரிக்காலன்' என்றும், சூடுமிதிக்கத் தொடங்குதலை 'அரக்குப் புதைத்தல்' என்றும், சூடுமிதித்து முடித்தலை 'அரக்குக் கிளப்புதல்' என்றும், தண்ணீரை 'வெள்ளம்' என்றும் தேங்காயை 'வெள்ளோடன்' என்றும், கடகத்தைப் 'பெரு வாயன்' என்றும், வீட்டைக் 'கூரைக்கோடு' என்றும், மரைக்காலைக் 'கணக்கன்' என்றும் கைப்பெட்டியைக் 'குஞ்சுவாயன்' என்றும், போர் கிளறும் வளைதடியை 'வேலைக்காரன்' என்றும் கயிற்றை 'நெடு முழவன்' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

மட்டக்களப்புச் சோனகமக்களுடைய பேச்சு வழக்கிலும் தனித் தன்மை வாய்ந்த வேறுபாடுகள் சிலவுள. போய்விட்டார் என்பதைப் 'பேய்த்தார்' என்றும், வீட்டிலே என்பதை 'ஊட்டில்' என்றும் சொல்லுங்கள் என்பதைச் 'சொல்லுங்க' என்றும் அவர்கள் பேசுவார்கள். சிங்கள மொழித் தொடர்பாலும், கப்பனூர், கிறுட்டை, கணத்தை, கண்காட்டு முதலிய சொற்கள் மட்டக்களப்புத் தமிழிற் கலந்துள.[1]

நிறைவுரை

பல நாடுகளிலும் வாழுந் தமிழ்மக்களுடைய பேச்சிலே சில வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவர்களுடைய எழுத்திலே வேறுபாடுகள் இல்லை என்று கூறத்தக்க நிலையில் இப்பொழுது தமிழ் மொழி விளங்குகிறது. பேச்சிலுள்ள வேறுபாடுகளை அளவிறந்து பெருகாமற்றடுத்து, எழுத்தில்

---

1. அந்தோ எனுஞ் சிங்களச் சொல்முன்னரே தமிழிற் கலந்துளது.

எவ்வித வேறுபாடும் ஏற்படாமற் செய்தாற்ருன், தமிழ் வழங்கும் நாடுகள் யாவற்றிலும் இன்றுபோல் என்றும் தமிழ் மொழி ஒருதன்மையாக இலங்கும்.

தமிழகத்திலும், தமிழ் மக்கள் தொகையாக வாழும் இலங்கை, மலாயா, பர்மா, தென்னுபிரிக்கா, பீச்சித் தீவு முதலிய பல நாடுகளிலும் தமிழ் மொழியின் ஆக்கங் கருதிப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. வீட்டு மொழியாய் அஃது அடிமைப்பட்டுக் கிடந்த காலம் போய்விட்டது. கல்லூரிகளிலும், ஆட்சி நிலையங்களிலும், ஆலயங்களிலும் அது முதன்மை பெற்று வருகிறது. இவ்வாறு பல துறைகளிலும் வளருந் தமிழ் மொழியின் வளர்ச்சியினை ஒருமுகப்படுத்தி, நாடுதோறும் வேறுபட்டுக் கிளைமொழிகளாகப் பிரிந்துவிடாமல் அதனைப் பாதுகாத்தற்கு ஓர் **அகில உலகத் தமிழ்க்கலை மன்றம்** உடனே அமைக்கப்படல் வேண்டும். இம் மன்றம் தமிழ் வழங்கும் எல்லா நாடுகளிலும் உள்ள தமிழ் மக்களோடும்—சிறப்பாகத் தமிழ் அறிஞர்களோடும்—தொடர்பு கொள்ளுதல் வேண்டும். இந்த மன்றத்தின் தலைமை அலுவலகம் தமிழ் நாட்டில் இருத்தலே பொருத்தமானது. ஏனைய நாடுகள் ஒவ்வொன்றிலும் கிளை அலுவலகம் நிறுவப்படுதல் வேண்டும். இம்மன்றம் அரசியல் தவிர்ந்த ஏனைய துறைகளிலுஞ் சிறப்பாக மொழி, கலை, பண்பாடு முதலிய துறைகளிலும் உலகமெங்கும் வாழுந்தமிழ் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்தித் தமிழ் மொழியினதும் தமிழினத்தினதும் ஆக்கத்துக்கு உழைத்தல் இன்றியமையாதது.

இம்மன்றம் செய்யவேண்டிய பணிகள் பலவுள. இவற்றுள் உடனே செய்யப்படவேண்டியது கலைச்

சொற் கோவை ஒன்றினை அமைத்தலாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது இலங்கையிலும் மலாயாவிலும் தமிழகத்திலும் பல கலைகளையுந் தமிழிற் கற்பிக்கத் தொடங்கியுளர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் ஒரு' கலைச்சொற்கோவையினையும், சென்னை அரசினர் வேருெரு கலைச்சொற் கோவையினையும் வெளியிட்டுளர். பௌதிகம், இரசாயனம், கணிதம், பூமிசாத்திரம் எனுங் கலைகளுக்குரிய சொற்கோவைகளை இலங்கை அரசினர் வெளியிட்டுளர். ஏனைய கலைகளுக்குரிய சொற்கோவைகளையும் வெளியிட அவர்கள் முயல்கிருர்கள். இன்றுவரை தமிழில் வெளிவந்த இக் கலைச்சொற் கோவைகளிலுள்ள வேறுபாடுகள் பலவாகும். ஏறக்குறைய எழுபத்தைந்து சத வீதமான சொற்களிடையே வேற்றுமையும் முரண்பாடும் உண்டு. இந்த வேறுபாடுகளை நீக்க முயலுதல் தமிழார்வம் படைத்த பெருமக்களுடைய பெருங்கடனுகும்

உலகிலுள்ள எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளுங் கல்லூரிகளுங் கையாளுங் கலைச்சொற்கள் ஒரு தன்மையானவாகவே அமைதல் வேண்டும். ஆங்கிலம் போன்ற உலக மொழிகளில் இருப்பதுபோல், தமிழ் மொழியிலும் நாடுதோறும் வழங்குங் கலைச் சொற்கள் எவ்வித வேறுபாடு மற்றனவாய் இருத்தல் வேண்டும். ஒரு நாட்டில் வெளியாகும் தமிழ்ப் பாட நூல்கள் ஏனைய நாடுகளுக்கும் பயன்படத் தக்கனவாயிருத்தல் வேண்டும். தமிழ்மொழி பல கிளை மொழிகளாகப் பிரிந்து போகாமல் இருத்தற்கும் இஃது இன்றியமையாதது.

ஆசிய மொழிகளுள்ளே மிகத் தொகை

யான நாடுகளிலே பேசப்படும் மொழி தமிழே என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். இத்தகைய பெருமையுடைய மொழியினை வளர்த்தற்கும், அது வழங்கும் நாடுகளுடன் தொடர்பு கொள்ளுதற்கும் ஏற்றதொரு பொது நிலையம் இன்னும் அமைக்கப்படாதிருப்பது தாய்த்தமிழகத்துப் பெருமக்களுக்குஇழுக்கினை உண்டாக்குகிறது. தமிழைப் பாதுகாத்து வளர்த்துப் பரப்ப வேண்டிய ஆற்றலும் உரிமையும் அவர்களுக்கே சிறப்பாகவுண்டு என்பதை உலகம் அறியும். தமிழ் மக்கள் தனிமையாக நடத்தும் தமிழரசும் தாய்த் தமிழகத்துக்கே வாய்த்துளது. எனவே, தமிழ் நாட்டுப் பெருமக்கள் அகில உலகத் தமிழ்க்கலை மன்றத்தை உடனே நிறுவி உலகமெங்குந் தமிழை வளர்க்க முன்வருவார்களாக. இவர்களுடைய முயற்சிக்கு இலங்கைத் தமிழ் மக்களின் ஆதரவு முற்காலத்திற் போல இக்காலத்திலும் நன்கு கிடைக்கும்.

இரவு விடிந்தது கேளீர்—தமிழ்
இளவள ஞாயிறு எழுந்தது பாரீர்
பரவுதற் கோடிநீர் வாரீர்—வந்து
பணிமின்கள் ! படிமின்கள் ! பயமில்லைப்பாரீர் !

—சோமசுந்தரப் புலவர்